# பின்னிணைப்புக்கள்

# பின்னிணைப்பு I

இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1976ஆம் ஆண்டின் தேசிய அரசப்பேரவையின் மூதன்மைச் சட்டவாக்கங்கள்.


பக்கம்

1. 1976ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தச்) சட்டத்திலிருந்து சில பகுதிகள் ... (i)

2. 1976ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, உண்ணுட்டு அரசிறை (திருத்தச்) சட்டம் ... .. .. (iii)

3. 1976ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, மக்கள் குடியிருப்புச் சட்டத்திலிருந்து சில பகுதிகள் ... .. ... (xxxxix)

4. 1976ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணச் சட்டத்திலிருந்து சில பகுதிகள் .. (Lix)

5. 1976ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, வெளிநாட்டுப் பிரயாணவரி (திருத்தச்) சட்டம் ... .. ... (Lxvi)

6. 1976ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் ... ... ... ... ... (Lxvii)

(v) பிரதிநிதித்துவம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர்; இவர், அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சைச் சேர்ந்தவரும், அவ் அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்டவருமான ஓர் அலுவலராதல் வேண்டும் ;

(vi) நீர்ப்பாசனப் பணிப்பாளர் பதவியை அப்போதைக்கு வகித்துவரும் ஆள் ;

(vii) பயிர்த்தொழிற் பணிப்பாளர் பதவியை அப்போதைக்கு வகித்துவரும் ஆள் ;

(viii) காணி ஆணையாளர் பதவியை அப்போதைக்கு வகித்து வரும் ஆள்,''; அத்துடன்

*(ஆ)* அவ் உட்பிரிவின் *(இ)* என்னும் பந்தியைவிட்டு விடுவதன்மூலமும்; அத்துடன்

*(2)* அப்பிரிவின் *(13)*ஆம் உட்பிரிவை விட்டுவிடுவதன்மூலமும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய அட்டவணை இடப்படுகின்றது.

அட்டவணை

காட்டுக் கட்டளைச்சட்டம்.

நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம்.

காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம்.

1973ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, கமத்தொழிற் காணிகள் சட்டம்.

1972ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, கமத்தொழில் விளைவுப்பெருக்கச் சட்டம்.

1973ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, அரச காணிகள் விற்பனை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்.

மேற்சொல்லப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றின் கீழும் சட்டமாக்கப் பட்ட எழுத்திலான சட்டம்.''

# 1976ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, உண்ணாட்டு அரசிறை (திருத்தச்) சட்டம்

## 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க அரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்

1. இந்தச் சட்டம் 1975 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க உண்ணாட்டு அரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும்) 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உண்ணாட்டு அரசிறைச் சட்டத்தின் 3ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (v)ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.—

"(v) 1965, ஏப்பிரில் 1ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு பயணத்திற்கான படியைத் தவிர, பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ ஊழியம் தொடர்பில் அளிக்கப்பட்டதான வேறேதேனும் படியும், 1965, ஏப்பிரில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு இலங்கை அரசாங்கத்தினால் பயணத்திற்காக அல்லது உபசரணைக்காக அளிக்கப்பட்ட படியைத் தவிர, பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ ஊழியம் தொடர்பில் அளிக்கப்பட்ட வேறேதேனும் படியும் :

ஆயின், —

(அ) 1975, மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலம் தொடர்பில் எவரேனும் ஆளுக்கு அவரது தொழில்தருநரால் அளிக்கப்பட்ட உபசரணைப் படியின் விடயத்தில் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கற்பாலதான (படிகள் எல்லாவற்றையும் விலக்கிய) சம்பளத்தின் பத்து சதவிகிதத்திற்குச் சமமான அல்லது அதனிலும் குறைந்ததான படியின் அத்தகைய பாகமானது, அத்தகைய படியின் அத்தகைய பாகம் அத்தகைய ஆளினால் அவரது கடமைகளின் போது பயன்படுத்தப்பட்டதென, மதிப்பீட்டாளர் திருப்தியடையும்படியாக எண்பிக்கப்பட்டால், ஊழியத்திலிருந்து பெறும் இலாபங்கலல்லவெனக் கருதப்படல் வேண்டும் ;

(ஆ) நிறைவேற்றலுவலராகப் பதவிக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் ஆளின் விடயத்தில். 11 (2) ஆம் பிரிவிற்கிணங்க அத்தகைய அலுவலரின் பயணச் செலவாக நிருணயிக்கப்பட்ட தொகையை விஞ்சுகின்ற பயணப்படியாக அளிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை, 1965, மார்ச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு ஊழியத்திலிருந்து பெறும் இலாபமாகக் கருதப்படல்வேண்டும் ;

(இ) தொழில்தருநரொருவரால், ஊழியரொருவருக்கு, ஊழியரின் வதிவிடத்திலிருந்து அவரது தொழில்புரியும் இடத்திற்கும், அவரது தொழில்புரியும் இடத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கும் போய்வரவென அளிக்கப்பட்ட பயணப்படி தவிர அத்தகைய் தொழில்தருநரால் கொண்டுநடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடர்பான பயணத்திற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் படியின் விடயத்தில் —

(i) அத்தகைய படியானது மாதமொன்றிற்கு நூறு ரூபாவை விஞ்சாவிட்டால், 1965, ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று தொடங்குகின்ற மதிப்பீட்டாண்டிற்கும், அடுத்துவரும் மூன்று மதிப்பீட்டாண்டுகளுள் ஒவ்வொன்றுக்கும் ஊழியத்திலிருந்து பெறும் இலாபங்கள் அல்ல எனக் கருதப்படல் வேண்டும், அத்துடன்

(ii) அத்தகைய படியானது ஆண்டொன்றிற்கு ஆயிரத்து இருநூறு ரூபாவை விஞ்சாவிட்டால் அல்லது அத்தொகையை விஞ்சிஞல், அந்தப்படியின் அத்தொகையை விஞ்சாமல் இருக்கின்றதான அத்தகைய பாகம், 1969, ஏப்பிரில் 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனுல் 1974, ஏப்பிரில் 1ஆம் தேதிக்குப் பிந்தாமல் தொடங்குகின்ற ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் ஊழியத்திலிருந்து பெறும் இலாபங்களல்லவெனக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) தமது ஊழியம் சம்பந்தமாக இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்யும் ஊழியரொருவருக்குப் பயணத்திற்காகவும், உணவுச் செலவுக்காகவும், விடுதிச்செலவுக்காகவும் வழங்கப்பட்ட ஏதேனும் படி, அத்தகைய படியானது அந்நோக்கத்துக்காகச் செலாவணிக்கட்டுப்பாட்டாளரிஞல் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு மேற்படாதவிடத்து, 1969 ஏப்பிரில் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டு எதற்கும், ஊழியத்திலிருந்து பெற்ற இலாபங்களல்லவெனக் கருதப்படுதல்வேண்டும் ;"

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

"(உஉ) 1976, ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு, 54 ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவில் அல்லது (9)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தனியாளொருவரல்லாத இலங்கையில் வதியும் எவரேனும் தனியாளி

ளுல், ஏதேனும் ஊழியத்தின்போது, உயர்தொழிலின் போது அல்லது வாழ்க்கைத்தொழிலின்போது இலங்கைக்கு வெளியில், அவரால் அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் அவரால் உழைக்கப்பட்ட வேதனுதிகள், அவரால் இலங்கைக்கு வெளியில் செலவிடப்பட்ட நியாயமான சொந்தச் செலவுகள் எனச் செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் கருதப்படுகின்றவாருன அத்தகைய தொகையைக் குறைத்து, அவரால் செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் அதன் சார்பில் விதிக்கப்படக்கூடியவாருன அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்குமெனின் ; '' : அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துத்துவதன்மூலமும் :—

"(ஐஐ) மக்கள் சீனக் குடியரசு அரசாங்கத்தினுல் அல்லது அவ்வரசாங்கத்தின் முகவர் நிலையமொன்றினுல், கப்பற் சொந்தக்காரர் அல்லது கப்பல் வாடகைக்கமர்த்துநர் என்ற தொழிலிலிருந்து இலங்கையிலிருந்து பெறப்பட்டனவும், அவ்வரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டனவுமான இலாபங்களும் வருமானமும் ; " ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1அ) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவானது 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும், அவ்வுட்பிரிவின் (ர) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியானது இடப்பட்டிருந்தாற்போன்று பயனுடையதாதல்வேண்டும்:—

(ர) (அ) அச்சீட்டாளர், வெளியீட்டாளர், போக்குவரத்தாளர் அல்லது வடிசாலை நடாத்தும் தொழிலிலிருந்து, அல்லது

(ஆ) எந்தக் காலத்தின் இலாபங்கள்மீதும் வருமானம் மீதும் 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு வருமானவரி செலுத்தற்பாலதோ அந்தக் காலத்திற்கு முன்னராயில்லாததும், அந்த அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாருனதுமான அத்தகைய காலத்துக்கு கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் அமைச்சரினுல் குறிப்பிடப்படும் வேறு ஏதேனும் தொழிலிலிருந்து,

1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்டதும் அதன் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோர் இலங்கையில் வதிபவராயுள்ளதுமான ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு உண்டாகும் இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த அச்சங்கத்தின் வேறு இலாபங்களும் வருமானமும் ;".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 அ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஈ) (ஆ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவையான கம்பனியொன்றின் அத்தகைய இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து அக் கம்பனியின் பங்குக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் ஏதேனும் பங்கிலாபம் :

ஆயினும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும் —

(i) 1974 நவம்பர் 6ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும்,

(ii) கம்பனியொன்றின் மூலதனத்திலுள்ளதும் சாதாரணப் பங்கல்லாததுமான ஏதேனும் பங்கு தொடர்பில் 1974 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும், அத்துடன்

(iii) (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவை வையும், 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஏற்பட்ட அல்லது பெறப்பட்டவையுமான அத்தகைய இலாபங்களிலும் வருமானத்திலுமிருந்து வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும், அத்துடன்

(iv) கம்பனியொன்றின் மூலதனத்திலுள்ள சாதாரண பங்கு ஒன்று தொடர்பில், அக்கம்பனியின் ஏதேனும் கணக்கீட்டுக் காலத்தின் இலாபங்களிலிருந்து, 1974 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் பங்கிலாபங்களின் மொத்தத் தொகையின்

(அ) அத்தகைய கணக்கீட்டுக் காலம் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாதிருக்குமிடத்து. 1974 நவம்பர் 6ஆந் தேதிக்கு முன்னர் அப்பங்கின்மீது செலுத்தப்பட்டதொகையின் பத்து சதவிகிதத்தை விஞ்சுகின்ற,

(ஆ) அத்தகைய கணக்கீட்டுக்காலமானது பன்னிரண்டு மாதங்களுக்குக் குறைவாகவுள்ளவிடத்து, ஓர் ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு அந்தக் கணக்கீட்டுக் காலத்திலுள்ள நாட்களின் எண்ணிக் கையானது என்ன விகிதத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதத்தினை பத்து சத விகிதத்திற்குக் கொண்டுள்ளதும், 1974 நவம்பர் 6ஆந் தேதிக்கு முன்னர் அப்பங்கின்மீது கொடுக்கப்பட்டதுமான பணத்தொகையின் அத்தகைய விகிதத்தினை விஞ்சு கின்ற,

அத்தகைய பாகத்திற்கும்,

ஏற்புடையதாதலாகாது.''.

(2) அப்பிரிவின் ஓராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட் பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் : -

"(1அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அவ் வுட்பிரிவின்கீழ் வருமானவரியிலிருந்து விலக்களித்தலானது அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், அல்லது (இ) என் னும் பந்தியில் குறிப்பிடப்படும் இலாபங்களுக்கும் வரு மானத்திற்கும், அத்தகைய இலாபங்களும் வருமானமும் 1975, ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின் னர் எழுந்தனவெனின் அல்லது பெறப்பட்டனவெனின், ஏற்புடையதாகாது ''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது : —

"(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் கூட்டுத் தாபனத்தின் அல்லது பொறுப்புமுயற்சியின் ஏதேனும் மதிப்பீட் டாண்டுக்கான இலாபங்களும் வருமானமும் (2) ஆம் உட்பிரிவின் பயனைக்கொண்டு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கு மிடத்து அவ்வாண்டில் அத்தகைய வருமானத்திலிருந்தும் இலாபங் களிலிருந்தும் அக்கூட்டுத்தாபனத்தின் அல்லது பொறுப்புமுயற்சி யின் பங்குக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் எல்லாப் பங்கிலாபங் களும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டுமென்ப துடன், அதற்கிணங்க 27ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய பங்கிலாபங்களுக்கு ஏற்புடையனவாதலும் ஆகாது :

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள தெதுவும் —

(அ) 1974 நவம்பர் 6ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின் னர் அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டவாறுன, (1)ஆம் உட் பிரிவின் (v)ஆம் பந்தியில் அல்லது (vi) ஆம் பந்தியில் குறிப் பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய ஏதேனும் பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்தும் கம்பனியொன்றினல் வெளிப் படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும்,

(ஆ) கம்பனியொன்றின் மூலதனத்திலுள்ளதும் சாதாரணப் பங்கல்லாததுமான ஏதேனும் பங்கு தொடர்பில் 1974 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும், அத்துடன்

(இ) கம்பனியொன்றின் மூலதனத்திலுள்ள சாதாரண பங்கு ஒன்று தொடர்பில், அக்கம்பனியின் ஏதேனும் கணக்கீட்டுக் காலத்தின் இலாபங்களிலிருந்து, 1974 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் பங்கிலாபங்களின் மொத்தத் தொகையின் —

(i) அத்தகைய கணக்கீட்டுக் காலம் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாதிருக்குமிடத்து, 1974 நவம்பர் 6ஆந் தேதிக்குமுன்னர் அப்பங்கின்மீது செலுத்தப்பட்ட தொகையின் பத்து சதவிகிதத்தை விஞ்சுகின்ற, அத்துடன்

(ii) அத்தகைய கணக்கீட்டுக் காலமானது பன்னிரண்டு மாதங்களுக்குக் குறைவாகவுள்ளவிடத்து, ஓர் ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு அந்தக் கணக்கீட்டுக் காலத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கையானது என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தினை பத்து சத விகிதத்திற்குக் கொண்டுள்ளதும் 1974 நவம்பர் 6ஆந் தேதிக்கு முன்னர் அப்பங்கின்மீது கொடுக்கப்பட்டதுமான பணத்தொகையின் அத்தகைய விகிதத்தினை விஞ்சுகின்ற,

அத்தகைய பாகத்திற்கும்,

ஏற்புடையதாதலாகாது.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில். அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும், காப்புவாசகத்தினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள தெதுவும்—

(அ) 1974 நவம்பர் 6 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினல் அங்கிகரிக்கப்பட்டவாறான அத்தகைய பொறுப்புமுயற்சி எதனையும் கொண்டுநடாத்தும் கம்பனியொன்றினல் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும்;

(ஆ) கம்பனியொன்றின் மூலதனத்திலுள்ளதும், சாதாரண பங்கல்லாததுமான ஏதேனும் பங்கு தொடர்பில், 1974 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்திற்கும்; அத்துடன்

(இ) கம்பனியொன்றின் மூலதனத்திலுள்ள சாதாரண பங்கு ஒன்றின் தொடர்பில், அக்கம்பனியின், 1974 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் பங்கிலாபங்களின் மொத்தத் தொகையின்,

(i) அத்தகைய கணக்கீட்டுக் காலம் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாதிருக்குமிடத்து. 1974, நவம்பர் 6 ஆந் தேதிக்கு முன்னர் அப்பங்கின் மீது செலுத்தப்பட்ட தொகையின் பத்து சதவிகிதத்தை விஞ்சுகின்ற அத்துடன்

(ii) அத்தகைய கணக்கீட்டுக் காலமானது பன்னிரண்டு மாதங்களுக்குக் குறைவாகவுள்ளவிடத்து, ஓர் ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு அந்தக் கணக்கீட்டுக் காலத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கையானது என்ன விகிதத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதத்தினை பத்து சதவிகிதத்திற்குக் கொண்டுள்ளதும் 1974 நவம்பர் 6 ஆந் தேதிக்கு முன்னர் அப்பங்கின்மீது கொடுக்கப்பட்டதுமான பணத்தொகையின் அத்தகைய சதவிகிதத்தினை விஞ்சுகின்ற,

அத்தகைய பாகத்திற்கும்,

ஏற்புடையதாதலாகாது.''

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள ''முறையே'' என்னும் சொல்லிலிருந்து ''ஒன்பது மாதகாலத்துக்கும்'' என்பது வரையிலான சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலமும்:—

''அடுத்தடுத்துவரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலத்திற்கும்;'';

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலுள்ள ''முறையே 1974 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் தேதியன்றும், 1975 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் தேதியன்றும் முடிவடையும் அடுத்தடுத்து வரும் பன்னிரண்டு மாதங்கள்கொண்ட காலங்களுக்கு'' என்ற எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதை இடுவதன் மூலமும்:—

''1974 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் தேதியன்று தொடங்கி 1975 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடையும் அடுத்தடுத்துவரும் பன்னிரண்டு மாதங்கள் கொண்ட காலங்களுக்கும். 1975 சனவரி 1 ஆம் தேதி தொடங்குகின்றதும் 1976 மார்ச்சு 31 ஆம் தேதி முடிவடைகின்றதுமான காலத்திற்கும், அதன்பின்னர் அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாதகாலத்திற்கும்'' அத்துடன்;

அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியிலுள்ள ''1975 ஆம் ஆண்டு'' என்பது முதல் ''ஒன்பது மாதகாலம்'' என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலமும்:—

''அடுத்தடுத்துவரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலம்'';

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள ''1975 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதி வரை'' என்பதிலிருந்து ''ஒன்பது மாதகாலத்துக்கும்'' என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலமும்: —

''அடுத்தடுத்துவரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலத்திற்கும்;'';

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலுள்ள ''1975 திசம்பர் 31 ஆம் தேதிவரை'' என்ற சொற்களுடனும் இலக்கங்களுடனும் தொடங்கி ''காலம் ஒவ்வொன்றுக்கும்'' என்ற சொற்கள் வரையிலான சொல்லமைப்புக்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலமும்:

''1974 திசம்பர் 31 ஆம் தேதிவரையும், 1975 சனவரி 1 ஆம் தேதி தொடங்குகின்றதும் 1976 மார்ச்சு 31 ஆம் தேதி முடிவடைகின்றதுமான காலத்திற்கும், அதன் பின்னர் அடுத்தடுத்துவரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலத்திற்கும்''; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியிலுள்ள ''1975 ஆம் ஆண்டு'' என்பது முதல் ''ஒன்பது மாதகாலம்'' என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம்.—

''அடுத்தடுத்துவரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாத காலம்'': அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவிலுள்ள ''1975 திசம்பர் 31 ஆம் தேதிவரை தயாரித்தல் வேண்டும்.'' என்ற எல்லாச் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:—

''அத்தகைய வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடங்கப்பட்டதிலிருந்து உடன் அடுத்துவரும் மார்ச்சு 31 ஆம் தேதிவரை தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அதன்பின்னரான கணக்குகளை அடுத்தடுத்துவரும் ஒவ்வொரு பன்னிரண்டு மாதகாலத்திற்கும் தயாரித்தலும் வேண்டும்''

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(ஆ) ஏதேனும் வியாபாரத்தின், தொழிலின், உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் மதிப்பீட்டாண்டின் போது அவரால் உறப்பட்டதும், அது இலாபமாக இருந்திருப்பின் இச்சட்டத்தின் கீழ் மதிப்பிடற்பாலதாக இருந்திருப்பதுமான நட்டத்தொகை:

ஆயின், மதிப்பீட்டாண்டு முடிவடைந்த பின்னர் ஆறுமாதங் களுள் எழுத்திலான அறிவித்தல்மூலம் கோரப்பட்டாலொழிய அத்தகைய கழிவெதுவும் செய்யப்படலாகாது.' ,;

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவு இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''1974 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1ஆம் நாளன்றும்'' என்பது முதல் "மதிப்பீட்டாண்டுகளுள் ஏதேனும் ஒன்றுக்கு'' என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "1974 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆம் நாளன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு'' என்ற சொற்களையும் இலக்கங்களையும் இடு வதன்மூலமும்''; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:—

'குறித்த சில நட்டங்கள் தொடர்பில் 1974 ஆம் ஆண்டு ஏப்பிரில் முதலாம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டுகளுக்கு நிவாரணமளித்தல்.''.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:—

"(3) பின்போடப்பட்ட ஆண்டுத் தொகையொன்றைக் கொள் வனவு செய்வதற்காகச் செலுத்தப்பட்ட கட்டுப்பணம் தொடர்பில் 16உ என்னும் பிரிவின்கீழ் விடுதொகையொன்று எத்தனியாளுக்கு வழங்கப்பட்டதோ அத்தனியாளொருவர், அத்தகைய கட்டுப் பணம் தொடர்பில் இப்பிரிவின் கீழான விடுதொகையொன்றுக்கு உரித்துடையவராதலாகாது''.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 இஇ என்னும் பிரிவானது, அப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவைநீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:—

(1) இப்பிரிவில் ''அங்கீகரிக்கப்பட்ட முதலீடு'' என்பது—

(அ) 68 அ என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட கம்பனி யொன்றினல் அல்லது ஆட்கள் குழுவொன்றினல் செய்யப் பட்ட அங்கீகரிக்கப்பட்ட முதலீடு ஒன்று;

(ஆ) பொருட்களை அல்லது பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்கு அல்லது வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுக்காகச்

சேவைகளை ஏற்பாடு செய்வதற்கு இயன்றதெனக் தோதான அமைச்சரினால் கருதப்படுவதும், அத்தகைய அமைச்சரின் வேண்டுகோளின்படி நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால், இப்பிரிவின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புமுயற்சியொன்றென வெளிப்படுத்தப்படுவதுமான பொறுப்பு முயற்சி யொன்றைக் கொண்டுநடாத்துவதில் முற்றாக ஈடுபட்டிருக்கும் கம்பனியொன்றில், அப்போதுள்ள பங்குகளைத் தவிர்த்து சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை; அல்லது

(இ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும்—

(i) வீடுகள் அமைப்பதிலும், விற்பதிலும்; அல்லது

(ii) வீடமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின்கீழ், கட்டிடம் கட்டும் நோக்கங்களுக்கென நிலத்தின் அபிவிருத்தியிலும் விற்பனையிலும்; அல்லது

(iii) வீடுகள் அமைப்பதிலும், விற்பதிலும், அத்துடன் வீடமைப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின் கீழ், கட்டிடம் கட்டும் நோக்கங்களுக்கென நிலத்தின் அபிவிருத்தியிலும் விற்பனையிலும்; அல்லது

(iv) இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமானதென அமைச்சர் கருதும் பொறுப்புமுயற்சி யொன்றைக் கொண்டுநடாத்துவதில்,

முற்றாக ஈடுபட்டிருக்கும் கம்பனியொன்றில், அப்போதுள்ள பங்குகளைத் தவிர்த்து சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்வதில், 1975 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் முதலீடு செய்யப்பட்ட ஏதேனும் பணத்தொகை; அல்லது

(ஈ) தனியாளொருவரினால்,—

(i) வீடொன்றை அமைப்பதற்காக, அல்லது 1973 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் முதலாவது வீடொன்றையோ, வீடொன்றை அமைப்பதற்கான முதலாவது இடத்தையோ கொள்வனவு செய்வதற்காக, அத்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட ஏதேனும் கடன்முதலை மீளச் செலுத்துவதில்; அல்லது

(ii) வாடகைக் கொள்வனவு நியதிகளின் மேல், 1973 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வாடகைக்கு விடப்பட்ட ஏதேனும் வீடு தொடர்பில் மாதாந்தக் கொடுப்பனவாக,

அரசாங்கத்திற்கு அல்லது பணச் சட்டத்தின் கருத்தெல்லைக் குட்பட ஏதேனும் வங்கி நிறுவனத்திற்கு, அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபைக்கு அல்லது வீடமைப்பு என்னும் விடயத் திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அந்நோக்கத்துக் கென அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு 1974 ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை; அல்லது

(உ) 1974 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தனியாளொருவரினால் அமைக்கத் தொடங் கப்பட்ட முதலாவது வீட்டை அமைப்பதில் அவரினால் செல வழிக்கப்பட்டதென தேசிய வீடமைப்பு ஆணையாளரால் சான்றளிக்கப்பட்டதும் அத்தகைய தொகையானது அர சாங்கத்திடமிருந்து அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப் பிடப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அல்லது அதிகாரசபையிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஏதேனும் கடன் மீதான தொகையொன்றல்லாததுமான ஏதேனும் தொகை; அல்லது

(ஊ) 1974 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் முதலாவது வீட்டை அல்லது அத்தேதி யன்று அல்லது அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட வீடொன்றை அமைப்பதற்கான முதலாவது இடத்தைக் கொள்வனவுசெய்வதற்காக தனியாளொருவரினால் செல வழிக்கப்பட்டதும், அத்தகைய தொகையானது அரசாங்கத் திடமிருந்து அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அல்லது உள்ளூரதி கார சபையிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஏதேனும் கடன் மீதான தொகையொன்றல்லாததுமான ஏதேனும் தொகை,

எனப் பொருளாகும்.'

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்ட வாக்கத்தின் 16உ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:

16உ (1) 1977 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கான எவரேனும் தனியாளின் மதிப்பிடப்படற்குரிய வருமானம், அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஏதேனும் உயர்தொழிலிலிருந்து அல்லது வாழ்க் கைத் தொழிலிலிருந்து அவரது சொந்த முயற்சியின் மூலமாக அவரால் உடனடியாகப் பெறப்படும் வருமானத்தைக் கணக்கிலெடுத்துக் கணிக்கப் படுகின்றபோதும், அத்தகைய தனியாள் பின்போடப்பட்ட ஆண்டுத் தொகையொன்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கான ஏதேனும், கட்டுப்பணத்தை அம்மதிப் பீட்டாண்டுக்கு முற்போந்த ஆண்டின்போது செலுத்தியுள்ளபோதும்—

(i) அத்தகைய கட்டுப்பணத்தொகைக்குச் சமமான பணத்தொகை யொன்று, அல்லது

(ii) அம்மதிப்பீட்டாண்டிற்காக அத்தனியாள் அத்தகைய உயர்தொழி லிலிருந்து அல்லது வாழ்க்கைத்தொழிலிலிருந்து அவரது சொந்த முயற்சியின்மூலமாக அவரால் உடனடியாகப் பெறப்படும் இலாபங் களினதும் வருமானத்தினதும் பதினைந்து சதவீதத்தினைக் குறிக்கும் தொகையொன்று, அல்லது

(iil) ஆறாயிரம் ரூபா,

ஆகிய இவற்றில் எது ஆகக்குறைந்ததான தொகையாக உள்ளதோ, அத்தொகை, அத்தகைய கட்டுப்பணம் தொடர்பிலான விடுதொகையாக விருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விடுதொகையானது. அம் மதிப்பீட்டாண்டுக்கான அவரது வரிசெலுத்தற்குரிய வருமானத்தைக் கணிப் பதில், அம்மதிப்பீட்டாண்டுக்காக அத்தனியாளின் மதிப்பிடப்படற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விடுதொகையொன் றுக்கு உரித்துடையவரான தனியாளொருவரின் மதிப்பிடப்படற்குரிய வரு மானம் முழுவதும், அத்தனியாள் எக்குடும்பத்தின் உறுப்பினரொருவராக உள்ளாரோ அக்குடும்பத் தலைவரது மதிப்பிடப்படற்குரிய வருமானத் தோடு கூட்டுமொத்தமாக்கப்படும்போது, அக்குடும்பத்தின் தலைவரானவர், அவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து, அவ்வுட்பிரிவின் கீழ் அத் தனியாள் உரித்துடையவராயுள்ள ஏதேனும் விடுதொகையைக் கழித்துக் கொள்ளுதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் தனியர்ளொருவர் தொடர்பில் ''பின்போடப்பட்ட ஆண்டுத்தொகை'' என்பது, அத்தனியாளுக்கு, ஒன்றில், அவர் ஐம்பத் தைந்து வயதுக்குக் குறையாத வயதினை அடைவதன்மீது, அல்லது இலங் கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விதப்புரையின்மீது, அமைச்சர் அங்கீகரிக்கக்கூடியவாறான அத்தகைய சூழ்நிலைகளில் செலுத்தப்படற்குரிய ஆண்டுத்தொகையொன்று எனப் பொருள்படும்.''

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(3) (அ) ஓய்வூதியமொன்றை மாற்றுதலில் பெறப்பட்ட பணத்தொகை யொன்று, அல்லது

(ஆ) 16உ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆண்டுத் தொகையொன்றை மாற்றுதலில் பெறப்பட்ட பணத்தொகை யொன்று, அல்லது

(இ) கைம்பெண், அனாதை ஓய்வூதிய நிதியக் கட்டளைச் சட் டத்தின் 46 (1) ஆம் பிரிவின்கீழ் அல்லது 49ஆம் பிரிவின் கீழ் அல்லது உள்ளூராட்சிச் சேவைக்கெனத் தாபிக் கப்பட்டதான ஏதேனும் கைம்பெண், அனாதை ஓய்வூதிய நிதியம் அல்லது திட்டம் தொடர்பிலானதும்,

சொல்லப்பட்ட 46 (1) ஆம் பிரிவுக்கு அல்லது 49 ஆம் பிரிவுக்கு நேரொத்ததாகவிருப்பதுமான ஏதேனும் ஒழுங்கு விதியின்கீழ் மீளளிக்கப்பட்ட பணத் தொகையொன்று, அல்லது

(ஈ) இளைப்பாற்றுப் பணிக்கொடையொன்ருகப் பெறப்படும் பணத் தொகையொன்று, அல்லது

(உ) பதவியை அல்லது ஊழியத்தை இழந்தமைக்கான நட்ட ஈடாக, 1968 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் பெறப்பட்ட பணத்தொகையேதேனும், அல்லது

(ஊ) ஏதேனும் ஊழியத்திலிருந்து அவர் இளைப்பாறுகின்ற நேரத்தில், ஆணையாளர் தலைமையதிபதியினல் அங்கீகரிக்கப்பட்ட தான சகாய நிதியமொன்றிலிருந்து, அச்சகாய நிதியத்துக்கு 1954 ஏப்பிரில் 1 ஆந் தேதிக்குப்பின்னர் அவரினல் செலுத்தப்பட்டனவான உதவுதொகைகளைக் குறிக்கின்றவாருன அப் பணத்தொகையின் அத்தகைய பாகத்தைத் தவிர அவருக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகையொன்று, அல்லது,

(எ) (அந்நிதியத்துக்கான அவரது உதவுதொகைகளைக் குறிக்கின்றவாருன அப்பணத்தொகையின் அத்தகைய பாகமும், 1968 ஏப்பிரில் 1 ஆந் தேதிக்கு முன்னர் அந்நிதியத்துக்குத் தொழில்தருநரினல் கொடுக்கப்பட்ட உதவுதொகைகளைக் குறிக்கின்ற வாருன அப்பணத்தொகையின் அத்தகைய பாகமும், தொழில்தருநரினல் கொடுக்கப்பட்ட அத்தகைய உதவுதொகைகள்மீது திரண்ட வட்டியும், அவ்வாறு தொழில் தருநரினல் கொடுக்கப்பட்ட அத்தகைய உதவுதொகையும் அத்தொழில்தருநரினற் கொடுக்கப்பட்ட உதவு தொகைகளின்மீது திரண்ட வட்டியும் தொடர்பில், தொழில் தருநரினல் பதினைந்து சதவீதத்திலான வரி செலுத்தப்பட்டிருந்தால், செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே, இவற்றைத் தவிர), ஊழியரொருவருக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சகாய நிதியமொன்றிலிருந்து 1967 ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்பட்ட பணத்தொகை ஏதேனும்,

தனியாளொருவரின் சட்டமுறையான வருமானத்தில் உள்ளடக்கப்படுவதன்விளைவாக ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்காக அவரது வரி செலுத்தற்குரிய வருமானம், மேற்குறிப்பிடப்பட்ட பணத்தொகையெதுவும் அவரது சட்டமுறையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிராவிடின் அவரது வரி செலுத்தற்குரிய வருமானமாக இருக்கவேண்டிய தொகையை விஞ்சுகின்றவிடத்து, அவ்வாறு விஞ்சுந்தொகையானது, வேறு ஏதேனும் உட்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும், நேர் முந்திய மூன்று மதிப்பீட்டாண்டுகளிலும் அவர் வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகியிருப்பின், அவர் அம்மூன்ருண்டுகளில் வரி செலுத்துவதற்கு ஆளாகியிருந்த நடைமுறையிலிருக்கும் விகிதத்தின் சராசரித் தொகையின்மீது அவரிடமிருந்து அறவிடப்படற்குரியதாதல் வேண்டும், அல்லது அவர் அம்மூன்ருண்டுகளில்

இரண்டாண்டுகளுக்கு மட்டுமே வரி செலுத்துவதற்கு ஆளாகியிருப்பின் அவர் அவ்விரண்டாண்டுகளில் வரி செலுத்துவதற்கு ஆளாகியிருந்த நடைமுறையிலிருக்கும் விகிதத்தின் சராசரித் தொகையின்மீது அவரிடமிருந்து அறவிடப்படற்குரியதாதல் வேண்டும், அல்லது அவர் அம்மூன்ருண்டுகளில் ஓராண்டுக்கு மட்டுமே வரி செலுத்துவதற்கு ஆளாகியிருப்பின் அவர் அவ்வாண்டில் வரி செலுத்துவதற்கு ஆளாகியிருந்த நடைமுறையிலிருக்கும் விகிதத்தின் சராசரித் தொகையின்மீது அவரிடமிருந்து அறவிடப்படற்குரியதாதல் வேண்டும்;

ஆயின், எம்மதிப்பீட்டாண்டுக்காகவும், அத்தகைய விஞ்சு தொகையின்மீது அறவிடப்படற்குரிய வரியின் விகிதமானது, பதினைந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது :

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்டனவான நேர் முந்திய மூன்று மதிப்பீட்டாண்டுகளில் எதனிலும் அவர் வதியாதிருந்தவிடத்து, மேற்சொல்லப்பட்ட விஞ்சு தொகைக்கு அறவிடப்படற்குரிய வரியின் விகிதம் ஆணையாளர் தலைமையதிபதியினுல் தீர்மானிக்கப்படல் வேண்டும் ; எவ்வாருயினும், அத்தகைய விஞ்சுதொகையின்மீது வரியாக அவரால் செலுத்தற்படற்குரிய தொகையானது, அவர் வதிகின்றவராக இருந்திருப்பின் செலுத்தப்படற்குரிய தொகையைவிடக் கூடுதலாகவிருத்தலாகாது :

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விஞ்சுதொகையானது, அவ்வேற்பாடுகளின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய பணத்தொகையின் சட்டமுறையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டதன்விளைவாக இருக்குமிடத்தும், அத்தகைய பணத்தொகை அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் ஏற்கனவே வரி செலுத்தப்பட்டுள்ளபோதும், அவ்வேற்பாடுகளின்கீழ் அத்தகைய விஞ்சுதொகையின்மீது அறவிடப்படற்குரிய வரியின் தொகையானது, ஏற்கனவே செலுத்தப்பட்ட வரித்தொகையினுல் குறைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஏற்கனவே செலுத்தப்பட்ட வரித்தொகை அத்தகைய விஞ்சுதொகையின்மீது அவ்வாறு அறவிடப்படற்குரிய வரியைவிடக் கூடுதலாகவிருப்பின், அத்தகைய விஞ்சு தொகையின்மீது வரி எதுவும் அவ்வாறு அறவிடப்படற்குரியதாதலுமாகாது :

ஆயின், மேலும், குறிப்பீடுசெய்யப்பட்ட விஞ்சுதொகை அவ்வேற்பாடுகளின் (எ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அத்தகைய பணத்தொகையின் சட்டமுறையான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டதன் விளைவினுல் ஏற்பட்டபோது, அத்தகைய விஞ்சுதொகையின்மீது அவ்வேற்பாடுகளின்கீழ் அறவிடப்படற்குரிய வரித்தொகையானது —

(i) அப்பணத்தொகை அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் ஏற்கனவே செலுத்தப்பட்ட ஏதேனும் வரித்தொகையினுலும், அத்துடன்

(ii) 1967 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு வரி செலுத்தற்கு அவர் ஆளாகும் அந்நடைமுறையிலிருக்கும் விகிதத்தில் அல்லது பதினைந்து சதவீதத்தில், 1966 ஏப்பிரில் 1ஆந் தேதிக்கு முன்னர் ஒழுங்குபடுத்தப்பட்ட சகாய நிதியத்துக்கு அவரினால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின்மீது, இவற்றில் எது குறைவானதாகவுள்ளதோ அதன்மீது, கணிக்கப்பட்ட வரிக்குச் சமமான தொகையொன்றினாலும்,

குறைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், (i)ஆம், (ii)ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகைகளின் கூட்டு மொத்தமானது, அத்தகைய விஞ்சுதொகையின்மீது அவ்வாறு அறவிடப்படற்குரிய வரியைவிடக் கூடுதலாகவிருப்பின் அத்தகைய விஞ்சுதொகைமீது வரி எதுவும் அவ்வாறு அறவிடப்படற்குரியதாதலுமாகாது.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான வரியின் நடைமுறையிலிருக்கும் விகிதமானது, 13, 27, 66, 67, 68, 69, 69அ, 70, 71 ஆகிய பிரிவுகளின்கீழ் ஏதேனும் நிவாரணத்திற்கான கழிவுத்தொகை எதுவுமில்லாமல், அவ்வாண்டிற்குச் செலுத்தற்பாலதான வரித்தொகையானது அவ்வாண்டிற்கான மதிப்பிடற்குரிய வருமானத்தின் தொகைக்கு எவ்வீதத்தில் அமைகின்றதோ அவ்வீதமாதல்வேண்டும்.''.

14. 1975ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவு இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

''(6) 1964 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 1974 ஏப்பிரில் 1ஆந் தேதிக்குப் பிந்தாமல் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான எவரேனும் தனியாளின் மதிப்பிடற்குரிய வருமானம் உழைத்த ஏதேனும் வருமானத்தைக் கொண்டிருக்கும்போது, அத்தகைய தனியாள், ஐந்நூறு ரூபாவான விடுதொகைக்கு, அல்லது அத்தகைய உழைத்த வருமானத்திற்குச் சமமான தொகைக்கு, இவற்றில் எது குறைவானதோ அதற்கு, உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தனியாள் குடும்பமொன்றில் உள்ளடக்கப்பட்டிருப்பாரெனின் அத்தகைய விடுதொகையானது, (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அக்குடும்பத் தலைவரின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதலும் வேண்டும்.

இந்த உட்பிரிவில் ''உழைத்த வருமானம்'' என்பது தனியாளொருவரினால் அவரது சொந்த முயற்சியின் மூலமாக அவரால் தனியாகவோ அல்லது பங்குடைமையொன்றின் விடயத்தில் அதன் தீவிரப் பங்காளியாகவோ புரியப்படும் அல்லது கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் உயர்

தொழிலிலிருந்து. வாழ்க்கைத் தொழிலிலிருந்து அல்லது ஊழியத்திலிருந்து உடனடியாகப் பெறப்படும் எவையேனும் இலாபங்கள் எனப் பொருள்படுவதுடன், எவரேனும் தனியாளுக்கு, அத்தனியாளின் அல்லது அவ்வேறு தனியாளின் கடந்தகால சேவைகள் தொடர்பில் அத்தனியாள் அல்லது வேறு எவரேனும் தனியாள் ஏதேனும் ஒய்வூதியத்திற்கு, மூப்போய்வு உதவுத்தொகைக்கு அல்லது வேறு படித்தொகைக்கு உதவு தொகை செலுத்தியிருந்தாலும்சரி இல்லாவிட்டாலும்சரி, வழங்கப்படுகின்றதான அத்தகைய ஓய்வூதியத்தையும், மூப்போய்வு உதவித்தொகையையும் அல்லது வேறு படித்தொகையையும் உள்ளடக்கும்.'';

(2) அப்பிரிவின் (6அ) என்னும் உட்பிரிவில், அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''1974 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டு தொடர்பிலும்'' என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, ''1974 ஏப்பிரில் 1ஆம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டு தொடர்பில்'' என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலமும் ;

(3) (6அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

''(6ஆ) 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான எவரேனும் தனியாளின் இலாபங்களும் வருமானமும் உழைத்த வருமானத்தைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய தனியாளானவர், அவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து —

(அ) அம்மதிப்பீட்டாண்டிற்கான உழைத்த வருமானம் ஆறுயிரம் ரூபாவுக்குக் குறைவானதாயிருக்குமெனின், —

(i) ஓராயிரத்து இருநூறு ரூபாவுக்கு, அல்லது

(ii) அவரது உழைத்த வருமானத்துக்கு,

இவற்றில் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகையொன்றுன விடுதொகையொன்றும், அத்துடன்

(ஆ) அம்மதிப்பீட்டாண்டிற்கான அவரது உழைத்த வருமானம் ஆறுயிரம் ரூபாவுக்குக் குறைவானதாய் இல்லாதிருக்குமெனின், —

(i) உழைத்த அவரது வருமானத்தில் இருபது சதவீதத்திற்கு, அல்லது

(ii) மூவாயிரம் ரூபாவுக்கு,

இவற்றில் எது குறைவானதோ அதற்குச் சமமான தொகையொன்ருன விடுதொகையொன்றும் கழிக்கப் படுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய தனியாள் குடும்பமொன்றில் உள்ளடக்கப்பட்டவராயிருக்கும்போது, இந்த உட்பிரிவின் கீழ் எந்த விடுதொகைக்கு அவர் உரித்துடையவராயிருக்கின்ருரோ அந்த விடுதொகையானது (7)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அக்குடும்பத் தலைவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக "உழைத்த வருமானம்" என்பது

(i) முறையே 1975 ஏப்பிரில் 1ஆம் தேதி, அல்லது 1976 ஏப்பிரில் 1ஆம் தேதி தொடங்கும் மதிப்பீட்டாண்டு தொடர்பில் (6) ஆம் உட்பிரிவிலுள்ள பொருளைக் கொண்டிருக்கும்; அத்துடன்

(ii) 1977 ஏப்பிரில் 1ஆம் தேதிக்குப்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில் ஏதேனும் ஊழியத்திலிருந்து வரும் இலாபம் எனப் பொருள்படும்.

(4) அந்தப் பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :

"(7) 1965 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக, குடும்பமொன்றில் பிள்ளையொன்ருகவுள்ள உறுப்பினர் ஒருவரது மதிப்பிடற்குரிய வருமானத்தின் ஏதேனும் பாகமானது, 20ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் குடும்பத்தலைவரின் மதிப்பிடற்குரிய வருமானத்துடன் கூட்டுமொத்தமாக்கப்படாதபோது, (2)ஆம் உட்பிரிவின் அல்லது (2அ) என்னும் உட்பிரிவின் அல்லது (3)ஆம் உட்பிரிவின் அல்லது (3அ) என்னும் உட்பிரிவின் அல்லது (4)ஆம் உட்பிரிவின் அல்லது (4ஆ) என்னும் உட்பிரிவின் அல்லது (6)ஆம் உட்பிரிவின் அல்லது (6அ) என்னும் உட்பிரிவின் அல்லது (6ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் அல்லது (8) ஆம் உட்பிரிவின்கீழ் மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய குடும்பத்தலைவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து, அப்பிள்ளை தொடர்பில் கழிவுத்தொகையெதுவும் கழிக்கப்படுதலாகாது,"; அத்துடன்

(5) அப்பிரிவின் (7)ஆம் உட்பிரிவினையுடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(8) 1976, ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் தனி

யாளின் இலாபங்களும் வருமானமும், அவரால் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஏதேனும் ஊழியத்திலிருந்து பெற்ற இலாபங்களை உள்ளடக்குமிடத்து, அத்தகைய தனியாள் அவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து —

(i) ஒன்பதாயிரம் ரூபாவுக்குச் சமமான தொகையிலான விடுதொகை, அல்லது

(ii) ஊழியத்தின் மூலம் பெறப்பட்ட அவரது இலாபங்களிலான தொகைக்குச் சமமான விடுதொகை,

இவற்றில் எது குறைவானதோ அது, கழிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன், அக்குடும்பத்தின் தலைவரானவர், (7)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, அவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து அத்தகைய விடுதொகை கழிக்கப்படுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும் :

ஆயின், 10ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள (ஈ) அல்லது (உ) என்னும் பந்தியின்கீழ், அல்லது 15ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ், அல்லது 16அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 16ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 16இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 16ஈ என்னும் பிரிவின்கீழ் அல்லது 16உ என்னும் பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின் முற்போந்த உட்பிரிவுகளின்கீழ் அத்தகைய தனியாள் அல்லது அவரது குடும்பத்தினர் எவருக்கும் விடுதொகை அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்து, இந்த உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) ஓய்வூதியம் பெறும் ஆளொருவர், ஊழியத்தைக் கொண்டு நடாத்துபவராக அல்லது செய்பவராகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பின்வரும் ஆட்கள், ஏதேனும் ஊழியத்திலிருந்து இலாபங்கள் பெறுபவர்களாகக் கருதப்படுதலாகாது: —

(i) அவரது பெற்றோர் ஒருவரினால் அல்லது ஒரே குடும்பத்திலுள்ள வேறெவரேனும் உறுப்பினரால் கொண்டு நடாத்தப்படும் தொழில் அல்லது அவரது பெற்றோர் ஒருவர் அல்லது ஒரே குடும்பத்திலுள்ள வேறெவரேனும் உறுப்பினர் ஒரு பங்காளராக வுள்ள பங்குடைமையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அக்குடும்பத்தின் உறுப்பினரொருவர்;

(ii) கம்பனியின் வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை ஐந்து ஆட்களுக்கு மேற்படாதவர்களால் அல்லது அவர்களது மனைவிமாரால் அல்லது பராயமடையாத பிள்ளைகளால், நேரடியாகவோ அல்லது நியமத்தர்கள் மூலமாகவோ வைத்திருக்கப்படும் கம்பனியில் தொழிலுக்கமர்த்தப்பட்டவரும், அத்தகைய ஆட்களில் அல்லது மனைவிமாரில் ஒருவர் அவரது பெற்றோரில் ஒருவராகவோ அல்லது அத்தகைய ஆட்களில் அல்லது மனைவிமாரில் அல்லது பராயமடையாத பிள்ளைகளில், அவர் அல்லது அவரது குடும்பத்திலுள்ள வேறெவரேனும், உறுப்பினர் ஒருவராகவோ உள்ளவருமான ஒரு குடும்பவுறுப்பினர்;

(iii) கம்பனியின் வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை ஐந்து ஆட்களுக்கு மேற்படாதவர்களால் அவர்களது மனைவிமாரினால் அல்லது பராயமடையாத, பிள்ளைகளினால், நேரடியாகவோ நியமத்தர்கள் மூலமாகவோ வைத்திருக்கப்படும் அந்தக் கம்பனியின் ஊழியராகவும், அத்தகைய ஆட்களில் அவர் ஒருவராகவுமுள்ளவரான அந்தக் கம்பனியின் அந்த ஊழியர்.

15. *1971* ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச்சட்டவாக்கத்தின் 23அ என்னும் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:—

(1) அந்தப் பிரிவின் (*1*) ஆம் உட்பிரிவில்—

(அ) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:

"(ஈ) *1971* ஏப்பிரில் *1* ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் *1974* ஏப்பிரில் *1* ஆந் தேதிக்குப் பிந்தாமல் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான வருமானவரியானது, இந்தச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் (V) ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்;" அத்துடன்

(ஆ) அந்த உட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(உ) *1975* ஏப்பிரில் *1* ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கான வருமானவரியானது, இந்தச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் VI ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) *1976* ஏப்பிரில் *1* ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கான வருமானவரி இந்தச் சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணிக்கப்படல் வேண்டும்."

DISCARDED
DISCARDED

(2) அந்தப் பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்: -

"(4) குடும்பமொன்றின் தலைவராகவுள்ள எவரேனும் ஆளின் வரி செலுத்தற்குரிய வருமானத்தின் மீது 1969 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காகச் செலுத்தற்குரிய வருமானவரியைக் கணிக்கும் நோக்கங்களுக்காக, இந்தச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் பாகத்தில் அல்லது V ஆம் பாகத்தில் அல்லது VI ஆம் பாகத்தில் அல்லது VII ஆம் பாகத்தில் அம்மதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடைத்தாகும் அப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்டதான முதற் கூறுகவுள்ள 1,800 ரூபாவும் இரண்டாம் கூறுகவுள்ள 1,800 ரூபாவும்

(அ) அத்தகைய குடும்பம்—

(i) ஒரு கணவனையும் மனைவியையும், அல்லது

(ii) தனியாளொருவரையும் செய்தொழிலின் மூலமான வருமானம் எதனையும் பெறுதவர்களான இரண்டுக்கு மேற்படாத பிள்ளைகளையும், அல்லது

(iii) தனியாளொருவரையும் இரண்டுக்கு மேற்படாத தங்கிவாழும் உறவினர்களையும், அல்லது

(iv) தனியாளொருவரையும் செய்தொழிலின் மூலமான வருமானமெதனையும் பெறுத பிள்ளையொன்றையும் தங்கிவாழும் உறவினர் ஒருவரையும்,

கொண்டிருக்குமெனின், 600 ரூபாவினுல் அதிகரிக்கப் படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய குடும்பம்—

(i) ஒரு கணவனையும் மனைவியையும் செய்தொழிலின் மூலம் வருமானமெதனையும் பெறுதவர்களான இரண்டுக்கு மேற்படாத பிள்ளைகளையும், அல்லது

(ii) ஒரு கணவனையும் மனைவியையும் இரண்டுக்கு மேற்படாத தங்கிவாழும் உறவினர்களையும், அல்லது

(iii) ஒரு கணவனையும் மனைவியையும் செய்தொழிலின் மூலம் வருமானமெதனையும் பெறுத பிள்ளையொன்றையும் தங்கிவாழும் உறவினர் ஒருவரையும், அல்லது

(iv) தனியாளொருவரையும் செய் தொழிலின்மூலம் வருமானமெதனையும் பெறுத பிள்ளைகளான மூவரையும் அல்லது அதற்கு மேற்பட்டவர்களையும், அல்லது

(v) தனியாளொருவரையும் தங்கிவாழும் உறவினர்களான மூவரையும் அல்லது அதற்கு மேற்பட்டவர்களையும், அல்லது

(vi) தனியாளொருவரையும் செய் தொழிலின்மூலம் வருமானமெதனையும் பெறுத மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளையும் தங்கிவாழும் உறவினர்களையும்,

கொண்டிருக்குமெனின், 1,200 ரூபாவினுல் அதிகரிக்கப் படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய குடும்பம்—

(i) ஒரு கணவனையும் மனைவியையும் செய்தொழிலின் மூலம் வருமானமெதனையும் பெறுத பிள்ளைகளான மூவரையும் அல்லது அதற்கு மேற்பட்டவர்களையும், அல்லது

(ii) ஒரு கணவனையும் மனைவியையும் தங்கிவாழும் உறவினர்களான மூவரையும் அல்லது அதற்கு மேற்பட்டவர்களையும், அல்லது

(iii) ஒரு கணவனையும் மனைவியையும் செய் தொழிலின் மூலம் வருமானமெதனையும் பெறுத பிள்ளைகளான மூவரையும் அல்லது அதற்குமேற்பட்டவர்களையும் தங்கிவாழும் உறவினர்களையும்,

கொண்டிருக்குமெனின், 1,800 ரூபாவினுல் அதிகரிக்கப் படுதல் வேண்டும்''.

16. 1974 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுல் கடைசியாகத் திருத்தப்பட்டவாறுன முதன்மைச்சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:—

(1) அந்தப் பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், ''1971 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்'' என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக ''1971 ஏப்பிரில் 1 ஆந் தேதி அல்லது அதன் பின்னர், ஆனல் 1974 ஏப்பிரில் 1 ஆந் தேதிக்குப் பிந்தாமல்'' என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அந்தப் பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்: --

''(எ) இந்தச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் VI ஆம் பாகத்தின் ஏற்பாடுகளானவை, 1975 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டுக்கு அத்தனியாளுக்கு அவை ஏற்புடையனவாகுவதில் அவ்வட்டவணையின் அப்பாகத்தில் குறிப்பிடப்பட்ட பணத்தொகைகளுள் ஒவ்வொன்றும், அல்லது 23அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட முறையில் கணிக்கப்பட்ட பணத் தொகைகளின் கூட்டுமொத்தம், விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய முற்போந்த ஆண்டிலுள்ள நாட்களின் தொகையுடன் அவர் வதிந்த நாட்களின் தொகை எந்த விகிதத்தில் அமையுமோ அவ் விகிதத்தில் குறைக்கப்பட்டாற் போன்று, பயனுடையனவாதல் வேண்டும்,

(ஏ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் VII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், 1976 ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு அத்தனியாளுக்கு ஏற்புடையதாகுவதில் அவ் அட்டவணையின் அப்பாகத்தில் குறிப்பிடப்பட்ட பணத் தொகைகளுள் ஒவ்வொன்றும். அல்லது 23அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டவாறு கணிக்கப்பட்ட தொகைகளின் கூட்டுமொத்தம், விடயத்துக்கேற்றவாறு, அவர் வதிந்த நாட்கள் அத்தகைய முந்திய ஆண்டிலுள்ள நாட்களின் தொகைக்கு என்ன விகிதமாக அமையுமோ அவ்விகிதத்தில் குறைக்கப்பட்டாற் போன்று, பயனுடையனவாதல் வேண்டும்.''

17 முதன்மைச்சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும்வேண்டும்:—

24அ. (1) பின்வருவனவற்றை உள்ளடக்கிய இலாபங்களேயும் வருமானங்களேயும் கணக்கிலெடுத்து, 1976 ஏப்பிரில் 1ஆம் தேதியன்ரோ அதன் பின்னரோ தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கான அவரது மதிப்பிடற்குரிய வருமானம் கணிக்கப்படுகின்றவரான எவரேனும் வதிவுள்ள தனியாளுக்கு [(4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவராயிராத தனியாள்] இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) அவரால் கொண்டுநடாத்தப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஓர் ஊழியத்திலிருந்து, கிடைப்பனவும் முப்பதிஞயிரம் ரூபாவுக்கு மேற்படாதனவுமான இலாபங்கள் மாத்திரம் : அல்லது

(ஆ) அவரது வாழ்க்கைத்துணேயினல் கொண்டுநடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஓர் ஊழியத்திலிருந்து கிடைப்பனவும், முப்பதிஞயிரம் ரூபாவுக்கு மேற்படாதனவுமான இலாபங்கள் மாத்திரம்; அல்லது

(இ) அவரால் கொண்டுநடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஓர் ஊழியத்திலிருந்தும் அவரது வாழ்க்கைத்துணேயினல் கொண்டுநடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஓர் ஊழியத்திலிருந்தும் பெறப்படுவனவும், அவற்றின் கூட்டுமொத்தமானது முப்பதிஞயிரம் ரூபாவுக்கு மேற்படாதனவுமான இலாபங்கள் மாத்திரம் அல்லது

(ஈ) பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) அல்லது பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்ட முப்பதிஞயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஊழியத்திலிருந்து பெறப்படும் அத்தகைய இலாபங்களும், ஊழியத்தைத் தவிர்ந்த வேறு எல்லா மூலங்களிலிருந்தும் மொத்தமாகப் பெறப்படும் ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு மேற்படாத இலாபங்களும் வருமானமும்

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தனியாளின் விடயத்திலும், 1976 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் —

(அ) அவரது வாழ்க்கைத்துணேயின் மதிப்பிடற்குரிய வருமானமானது அவரது மதிப்பிடற்குரிய வருமானத்தின் பாகமாக அமைவதாகக் கருதப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய வாழ்க்கைத்துணே அவரது குடும்பத்தின் ஓர்உறுப்பினராகக் கருதப்படுதலுமாகாது;

(ஆ) ஊழியத்தைத் தவிர்ந்த வேறு எல்லா மூலங்களிலிருந்தும், ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு மேற்படாது மொத்தமாகப் பெறப்படும் இலாபங்களும் வருமானமும் வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) 107 உ என்னும் பிரிவின்கீழ் ஆணேயாளர் தலைமையதிபதியால் விதிக்கப்பட்டவையும் அந்த மதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடையனவானவையுமான வருமானவரி வாய்ப்பாடுகளுக்கு இணங்க அவரது ஊதியத்திலிருந்து வருமானவரி கழிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த மதிப்பீட்டாண்டுக்கு அந்தத் தனியாள் தொடர்பில் வருமானவரி மதிப்பிடப்படுதலாகாது ;

(ஈ) 107எ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஆனவை, 107 உ என்னும் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினுல் விதிக்கப்பட்ட வருமானவரி வாய்ப்பாடுகளைப் பிரயோகித்தலில் ஏற்பட்ட பிழையொன்றினுல் வரியானது மேலதிகமாகக் கழிக்கப்பட்டுள்ளவிடத்துத் தவிர, ஏற்புடையனவாகாதிருத்தல் வேண்டும் ;

(உ) ஆணையாளர் தலைமையதிபதியினுல் 107 உ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டனவும் அம்மதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடையனவுமான வருமானவரி வாய்ப்பாடுகளைப் பிரயோகித்தலில் ஏற்பட்ட பிழையொன்றினுல் அத்தகைய வரி மேலதிகமாகச் செலுத்தப்பட்டதென்பதை மதிப்பீட்டாளரின் திருப்திக்கு அவர் எண்பித்தாலொழிய, 117 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், XIII அ என்னும் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்கீழ் கழிக்கப்பட்ட ஏதேனும் வரியினை மீளப் பெறுவதற்கு அவர் உரித்துடையவராகாதிருத்தல் வேண்டும் ;

(ஊ) 10ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (உ) என்னும் பந்தியின்கீழ், அல்லது 15ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், அல்லது 16அ என்னும் பிரிவின்கீழ், அல்லது 16 ஆ என்னும் பிரிவின்கீழ். அல்லது 16 இ என்னும் பிரிவின்கீழ், அல்லது 16ஈ என்னும் பிரிவின்கீழ், அல்லது 16உ என்னும்பிரிவின்கீழ், அல்லது [21ஆம் பிரிவின் (8)ஆம் உட்பிரிவின்கீழ்தவிர] அப்பிரிவின் ஏற்பாடுகளுள் எதன்கீழுள்ள கழிவுகள் எவற்றிற்கும், அவரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் எவரேனும் உரித்துடையவராகாதிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(எ) ஆணையாளர் தலைமையதிபதியினுல். 107உ என்னும் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டனவும் அம்மதிப்பீட்டாண்டிற்கு ஏற்புடையனவுமான வருமானவரி வாய்ப்பாடுகளுக்கு இணங்க அவரது ஊதியத்திலிருந்து வருமானவரி கழிக்கப்பட்டிருப்பின், மதிப்பீட்டாண்டிற்காக அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி தொடர்பில் XI அ என்னும் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் அவருக்கு ஏற்புடையனவாகாதிருத்தல் வேண்டும்

(3) 1976, ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில், தனியாளொருவரினது மனைவியின் மதிப்பிடற்குரிய வருமானமானது, (2)ஆம் உட்பிரிவின் கீழ் அம்மதிப்பீட்டாண்டிற்கான அத்தனியாளின் மதிப்பிடற்குரிய வருமானத்தின் பாகமாக அமைவதாகக் கருதப்படாதவிடத்து, அத்தகைய மனைவி அம்மதிப்பீட்டாண்டிற்கான மதிப்பிடற்குரிய அவளின் வருமானம் தொடர்பில் தனியாக மதிப்பிடப்படல் வேண்டும் ; அத்துடன் –

(அ) குடும்பமொன்றில் உள்ளடக்கப்படாத தனியாளொருவராக அம்மனைவி இருந்திருந்தால் அத்தகைய மனைவியானவர் 21 ஆம் பிரிவின் (8)ஆம் உட்பிரிவின்கீழ் உரிமையுடையவராயிருந்திருக்கக்கூடிய அத்தகைய விடுதொகைகளை மனைவியின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து கழித்த பின்னர் வரும் தொகை, அம்மதிப்பீட்டாண்டிற்கான அவரின் வரிவிதித்தற்குரிய வருமானமாதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய மனைவியானவர் வரி செலுத்தற்குரிய அவரது வருமானத்தின்மீது வரி செலுத்துதற்கு ஆளாதல் வேண்டும் ; அத்துடன்

(இ) இரண்டாம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ). (உ), (ஊ), (எ) ஆகிய பந்திகளிலுள்ள ஏற்பாடுகள் அத்தகைய மனைவிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) (அ) (i) அவரது பெற்றூர் ஒருவரினுல் அல்லது ஒரே குடும்பத்தி லுள்ள வேறெவரேனும் உறுப்பினரால் கொண்டுநடாத் தப்படும் தொழிலில் அல்லது அவரது பெற்றூர் ஒருவர் அல்லது ஒரே குடும்பத்திலுள்ள வேறெவரேனும் உறுப் பினர் ஒரு பங்காளராகவுள்ள பங்குடைமையொன்றில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள அக்குடும்பத்தின் உறுப் பினரொருவர் ;

(ii) கம்பனியின் வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளில் அரை வாசிக்கு மேற்பட்டவை ஐந்து ஆட்களுக்கு மேற்படா தவர்களால் அல்லது அவர்களது மனேவிமாரால் அல்லது பராயமடையாத பிள்ளைகளால் நேரடியாகவோ அல்லது நியமத்தர்கள் மூலமாகவோ வைத்திருக்கப்படும் கம்பனி யில் தொழிலுக்கமர்த்தப்பட்டவரும், அத்தகைய ஆட் களில் அல்லது மனேவிமாரில் ஒருவர் அவரது பெற்ருரில் ஒருவராகவோ அல்லது அத்தகைய ஆட்களில் அல்லது மனேவிமாரில் அல்லது பராயமடையாத பிள்ளைகளில், அவர் அல்லது அவரது குடும்பத்திலுள்ள வேறெவரேனும், உறுப்பினர் ஒருவராகவோ உள்ளவருமான ஒரு குடும்ப வுறுப்பினர் ; அல்லது

(iii) கம்பனியின் வழங்கப்பட்ட மொத்தப் பங்குகளில் அரை வாசிக்கு மேற்பட்டவை ஐந்து ஆட்களுக்கு மேற் படாதவர்களால், அவர்களது மனேவிமாரினுல் அல்லது பராயமடையாத பிள்ளைகளினுல், நேரடியாகவோ நியமத் தர்கள் மூலமாகவோ வைத்திருக்கப்படும் அந்தக் கம்பனி யின் ஊழியராகவும், அத்தகைய ஆட்களில் அவர் ஒரு வராகவுமுள்ளவரான அந்தக் கம்பனியின் அந்த ஊழியர் அல்லது

(ஆ) மதிப்பீட்டாண்டொன்று முடிவடைந்த பின்னர் பன்னிரண்டு மாதங்களுள், இப்பிரிவின் ஏற்பாடுகள் தமக்கு ஏற்புடையன வாகாதென ஆணேயாளர் தலைமையதிபதிக்கு எழுத்திலறி வித்தல் கொடுத்துள்ள தனியாளொருவருக்கு; அல்லது

(இ) (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தனியாளொரு வரின் மனேவிக்கு.

(1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது.''.

18. முதன்மைச்சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு. அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(1ஆ) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், 1976. ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு, கம்பனியொன்று எந்த வருமானவரி செலுத்துவதற்கு உள்ளாதல் வேண்டுமோ அந்த வருமானவரியானது, அக்கம்பனியானது மக்கள் கம்பனியொன்ருக இருந்திருந்தால் அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டு முழுவதிலும், அல்லது அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு முற் போந்த ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் விடயத் தில், அது கூட்டிணைக்கப்பட்ட தேதியிலிருந்து –

(அ) அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய கம்பனியின் வரி செலுத்தற்குரிய வருமானத்தின் நாற்பது சதவீதத்திற்குச் சமமானதொரு தொகையையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கான அத்தகைய கம்பனியின் வரி செலுத்தற்குரிய வருமானம் எத்தகைய இலாபங்களின் மீது கணிக்கப்படுகின்றதோ அத்தகைய இலாபங்களிலிருந்து அத்தகைய கம்பனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபங்களின் கூட்டுமொத்தத் தொகையின் $33\frac{1}{3}$ சத வீதத்திற்குச் சமமானதொரு தொகையையும்,

கொண்டிருத்தல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "மக்கள் கம்பனி" என்பது, இலங் கையில் வதிவுள்ளதும்,—

(அ) கம்பனியின் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அது ஒரு தனிப்பட்ட கம்பனியல்லவெனவும்,

(ஆ) அக்கம்பனியிலுள்ள பங்குக்காரர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கு மேற்பட்டதெனவும் ஒவ்வொரு பங்கினதும் பெயரளவிலான பெறு மதி பத்து ரூபாவுக்கு மேற்படாதது எனவும்,

(இ) கம்பனியால் செய்யப்பட்ட எவையேனும் பங்குகளின் பகிர்வில், அல்லது பகிரங்கச் சந்தையில் கம்பனியின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளில் எவரேனும் ஆள் முதலீடு செய்யலாம் எனவும்.

(ஈ) ஆளெவரேனும் தனியாகவோ அல்லது அவரது மனைவியுடன் அல்லது பராயமடையாத பிள்ளைகளுடன் சேர்ந்து நேரடியாகவோ அல்லது நியமத்தர்கள் மூலமாகவோ கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் பத்து சத வீதத்திற்கு மேற்பட வைத்திருக்க வில்லையெனவும்,

(உ) மூன்று அல்லது அதற்குமேற்பட்ட பணிப்பாளர்கள், அவர்களில் ஒவ்வொருவரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கும் ஒரு கம்பனி எனவும்

(ஊ) கம்பனியின் பணிப்பாளரெவரேனும் வேறேதேனும் மக்கள் கம்பனியில் பணிப்பாளராகப் பதவிவகிக்கவில்லை எனவும்,

பயன்பட, ஆணையாளர் தலைமையதிபதியால் விதிக்கப்படக்கூடியவாருன அத் தகைய படிவத்தில் கம்பனிகள் பதிவாளரிடமிருந்து பெற்ற சான்றிதழொன் றை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவும் கம்பனி என்று பொரு ளாகும்.".

19. முதன்மைச்சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:—

27அ. (1) வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின்கீழ் வருமானவரியிலிருந்து விலக் களிக்கப்பட்டுள்ள இலாபங்களிலிருந்து எவரேனும் பங்காளருக்குப் பண மாகவோ அல்லது பணம் கொடுக்கும்படியான கட்டளைமூலமாகவோ கொடுக்கற்பாலதான ஏதேனும் பங்கிலாபத் தொகையிலிருந்து, இச்சட் டத்தின் 5அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், அல்லது 6ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ், அல்லது 7அ என்னும் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 1973ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வருமானவரியி லிருந்து விலக்களிக்கப்படாத பங்கிலாபத்தின் அப்பாகத்தின் $33\frac{1}{3}$ சத விகிதத்திற்குச் சமமானதொரு தொகையைக் கழித்தல்வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் எத்தகைய வருமானவரித் தொகை யைக் கழிக்கும்படி வதிவுள்ள கம்பனி தேவைப்படுத்தப்படுகின்றதோ அத்தகைய தொகையானது அத்தகைய வதிவுள்ள கம்பனியிடமிருந்து குடியரசிற்குப் போகுமதியான கடனென்றுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தொகையானது, உடனடியாகவே அறவிடப்படக்கூடியதாத லும் வேண்டும், அல்லது அத்தகைய கம்பனியில் வேறுவகையாகச் செலுத் தப்படற்பாலதாகவுள்ள ஏதேனும் வருமானவரிக்கு மேலதிகமாக மதிப் பிடப்பட்ட தொகை அக்கம்பனிமீது விதிக்கப்படலாம்.

(3) ஏதேனும் வதிவுள்ள கம்பனியினால் வேறொரு கம்பனிக்குப் பங் கிலாபம் கொடுக்கப்படற்பாலதாகவும் அப்பங்கிலாபம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கழிவுசெய்யப்பட்டதாகவும் உள்ளவிடத்து, அந்தப் பங்கிலாபமானது, இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட கம்பனியின் மதிப் பிடற்குரிய வருமானத்தின் பாகமானதல்லவெனக் கருதப்படுதல் வேண்டும்.''.

20. முதன்மைச்சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :—

'(அஅ) 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு, அவர் அதன் உடைமையாளராக உள்ள ஏதேனும் மோட்டார் வாகனம் அல் லது அவர் குடும்பத்தலைவராக இருக்கின்றவிடத்து, அவர் அல் லது அவரது குடும்பத்திலுள்ள உறுப்பினர் எவரேனும் அதன் உடைமையாளராகவுள்ள ஏதேனும் மோட்டார் வாகனம் ;

"உடைமையாளர்'' என்பது, மோட்டார் வாகனமொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய மோட்டார் வாகனம் அவருக்கு ஈடுகொடுக்கப்பட்டுள்ள காரணத்தால் அல் லது அவ்வாகனம் தொடர்பிலான (வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை தவிர்ந்த) ஏதேனும் உடன்படிக்கை காரணமாக அம்மோட்டார் வாகனத்தை உடைமை கொண்டுள்ள ஆள் எனப் பொருள்படும்;'.

21. முதன்மைச்சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஈஈ) ஒரு குடும்பத்தில் ஓர் உறுப்பினருக்குக் கூடுதலான உறுப்பினர்கள், இந்தப் பந்தியின்கீழ் அவருடைய செல்வத்திலிருந்து ஒரு மோட்டார் வாகனத்தை விலக்குவதற்கு உரித்துள்ளவராகவுள்ளவிடத்து, அந்த விலக்களிப்பு அக்குடும்பத்தின் ஓர் உறுப்பினர் தொடர்பில் மாத்திரம் ஏற்புடைத்தாகின்றவாறாக. அவரது சொந்தப் பயன்பாட்டுக்கு வைத்திருப்பதும், அவருக்குச் சொந்தமானதும், அல்லது 30 (1) (அ) என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குட்பட்டதாக அவரது உடைமையிலுள்ளதுமான ஒரு மோட்டார் வாகனம்;";

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1ஆ) ஒராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிலுள்ள எது எப்படியிருப்பினும், அவரது சொந்தப் பயன்பாட்டுக்கென வைத்திருந்து, அவரே அதன் சொந்தக்காரராகவுள்ள ஏதேனும் மோட்டார்க்கார் 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளின் செல்வத்திலிருந்து விலக்கப்படலாகாது,";

(3) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2அ) இரண்டாம் உட்பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும், அவ்வுட்பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் முதலீடானது, 1975 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு எவரேனும் ஆளின் செல்வத்திலிருந்து விலக்கப்படலாகாது." அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் காணப்படும் "ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1974 ஏப்பிரில் 1ஆந் தேதிக்குப் பிந்தாமல் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு" என்னும் சொல்லமைப்பை இடுவதன்மூலமும்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் VII ஆம் அத்தியாயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய அத்தியாயம் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் VII அ என்னும் அத்தியாயமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

## 'அத்தியாயம் VII அ

## செலவின வரி விதித்தல்

38அ. 28ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தனியாள் எவருக்கும் இவ்வத்தியாயம் ஏற்புடையதாகாதிருத்தல்வேண்டும்.

38ஆ. (1) (இச்சட்டத்தின் 54ஆம் பிரிவின் (6)ஆம் உட்பிரிவின் கீழ் இலங்கையில் வதிவிலிருக்கிறர் எனக் கருதப்படும் தனியாள் ஒருவர் தவிர்ந்த) குடும்பமொன்றின் தலைவராக உள்ளவரும், அம்மதிப்பீட்டாண்டின் முற்போந்த ஆண்டில் இலங்கையில் வதிபவருமான தனியாள் ஒவ்வொருவரினதும் வரி விதிக்கக்கூடிய செலவினம் தொடர்பிலும், அத்துடன் குடும்பமொன்றில் உள்ளடக்கப்படாதவரும், அத்தகைய முற்போந்த ஆண்டில் இலங்கையில் வதிபவருமான தனியாள் ஒவ்வொருவரினதும் வரிவிதிக்கப்படற்பாலதான செலவினம் தொடர்பிலும் இவ்வத்தியாயத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அமைய, 1976 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும், (இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் ''செலவின வரி'' எனக் குறிப்பிடப்படும்) வரியொன்றினை, இச்சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதத்தில் விதித்தல்வேண்டும்

(2) தனியாள் ஒருவர் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டின் பாகமொன்றுக்கு மட்டுமே வதிவிலுள்ளவர் என்ற தன்மையில் செலவினவரி விதிக்கப்படற்குரியவராகின்றவிடத்து -

(அ) 30எ என்னும் பிரிவின்கீழான விடுதொகைகளில், அவர் எந்த நாட்களின்போது வதிந்தாரோ அந்த நாட்களின் எண்ணிக்கையானது அந்த முற்போந்த ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்துக்கு மாத்திரம், அந்த மதிப்பீட்டாண்டிற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும், அத்துடன்

(ஆ) இந்தச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் ஏற்பாடுகள், அத்தனியாளுக்கு அவற்றைப் பிரயோகிக்கும்போது, அவ்வேற்பாடுகளில் குறிப்பிடப்படும் பணத்தொகை ஒவ்வொன்றும், அவர் எந்த நாட்களின்போது வதிந்தாரோ அந்த நாட்களின் எண்ணிக்கையானது அந்த முற்போந்த ஆண்டிலுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அவ்விகிதாசாரத்தில் குறைக்கப்பட்டாற்போன்று, பயனுறுதல்வேண்டும்.

38இ. தனியாள் ஒருவரின் செலவினம் பின்வருவனற்றை உள்ளடக்குவதாகக் கருதப்படல் வேண்டும் :—

(அ) அத்தனியாளின் அல்லது அத்தனியாளினது குடும்பத்தைச்சேர்ந்த எவரேனும் உறுப்பினரின் ஏதேனும் கடப்பாடு அல்லது ஏதேனும் சொந்தத் தேவைப்பாடு தொடர்பில், அத்தனியாள் அல்லாத வேறு எவரேனும் ஆளால் உறப்பட்டதாயும் அச்செலவினம் அந்த ஆளால் உறப்பட்டிருக்காவிட்டால் அத்தனியாளால் அல்லது அத்தகைய உறுப்பினரால் உறப்பட்டிருக்கக்கூடியதும், அத்துடன் அத்தனியாளினது வரிவிதித்தற்குரிய செலவினத்தின் பாகமாக உள்ளதுமான ஏதேனும் செலவினம் ;

(ஆ) அத்தனியாள் அல்லாத வேறு எவரேனும் ஆளினல் அத்தனியாளுக்கு அல்லது அவரது குடும்பத்தைச் சேர்ந்த எவரேனும் உறுப்பினருக்குச் செய்யப்பட்டதும் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டதும் அத்தனியாளினல் அல்லது அவ் உறுப்பினரால் அனுபவிக்கப்பட்டதும், அந்த நன்கொடையை அல்லது நன்மையைச் செய்வதற்கான அல்லது ஏற்பாடு செய்வதற்கான செலவினமானது அத்தனியாளினல் அல்லது அத்தகைய உறுப்பினரால் உறப்பட்டிருப்பின் அத்தனியாளினது வரிவிதித்தற்குரிய செலவினத்தின் பாகமாக அமைவதுமான ஏதேனும் நன்கொடை அல்லது நன்மை ;

(இ) அத்தனியாளுக்கு அவரது தொழில்தருநரால் வாடகை இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் வதிவிடத்தின் வாடகைப் பெறுமதி, அல்லது அத்தகைய வதிவிடம், அத்தகைய வதிவிடத்தின் வாடகைப் பெறுமதிக்கும் குறைவான வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வாடகைக்கு மேற்பட்ட அத்தகைய வாடகைப் பெறுமதி; அத்துடன்

(ஈ) மோட்டார் வாகனமொன்றின் கொள்வனவிலும் அந்த மோட்டார் வாகனத்தைக் கொடுத்து மாற்றலிலும் உறப்பட்ட செலவினம் தவிர்ந்த வேறு தனிப்பட்ட பயன்பாட்டுக்காக மோட்டார் வாகனமொன்றைக் கொள்ளுவதில் உறப்பட்ட செலவினம்.

38ஈ. (1) தனியாளின் செலவினமானது பின்வருவனவற்றை உள்ளடக்காததாகக் கருதப்படுதல் வேண்டும்:—

(அ) அவரால் கொண்டுநடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஏதேனும் வியாபாரத்திலிருந்து, தொழிலிலிருந்து, உயர்தொழிலிலிருந்து அல்லது வாழ்க்கைத்தொழிலிலிருந்து இலாபங்களை அல்லது வருமானத்தை உண்டாக்குவதில் அவரால் உறப்பட்டதும், அவரது இலாபங்களை அல்லது வருமானத்தை நிச்சயிக்கும் நோக்கத்திற்காகக் கழிக்கப்படும்படியாக இச்சட்டத்தினல் அனுமதிக்கப்பட்டதுமான அத்தகைய செலவினம் எதுவும் அத்தகைய இலாபங்களை அல்லது வருமானத்தை உண்டாக்குவதில் அவரால் உறப்பட்ட ஏதேனும் மூலதனச் செலவினமும்;

(ஆ) அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் சம்பந்தமாக இலங்கைக்கு வெளியே பயணஞ் செய்வதில் அவரால் உறப்பட்ட செலவினமானது செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அங்கீகாரத்தோடு உறப்பட்டதும், அந் நோக்கத்திற்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்டதும் ஆனதொகைக்கு மேற்படாததாகவிருப்பின், அத்தகைய செலவினம்;

(இ) அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது செய்யப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில். வாழ்க்கைத்தொழில் அல்லது ஊழியம் சம்பந்தமாக விளம்பரஞ் செய்தலுக்காக முழுமையாகவும் தனியே அதற்காகவும் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ஈ) அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல் என்ற வகையில் அல்லது அவருக்குச் சொந்தமானதும் அவர் குடியிருப்பதுமான வீட்டைத் திருத்துதலைத் தவிர, அசைவற்ற ஆதனம் எதனையும் நிருமாணித்தல் அல்லது திருத்துதல் அல்லது சீராக்கல் என்ற வகையில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(உ) வைப்புக்களில் அல்லது கடன்களில் அல்லது பங்குகளில் அல்லது பிணைப்பணங்களிலான முதலீடுகள் என்ற வகையாக, தொழில் முயற்சி ஒன்றைக் கொள்வனவு செய்யும் வகையாக அல்லது ஒரு தொழில்முயற்சியில் மூலதனத்துக்கான உதவுதொகை என்ற வகையால் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ஊ) ஏதேனும் காப்புறுதிப் பத்திரம் தொடர்பில் கட்டுப்பணங்கள் கொடுத்தல், அல்லது ஆண்டுத்தொகை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காகக் கட்டுப்பணங்கள் கொடுத்தல் என்ற வகையாக அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(எ) ஏதேனும் பொன், வெள்ளிக் கட்டி வகையை அல்லது விலையுயர்ந்த கற்களை அல்லது நகையைக் கொள்ளுதல் என்ற வகையில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ஏ) ஏதேனும் கடனைத் திருப்பிக்கொடுத்தல் என்ற வகையில், அல்லது அதற்கான வட்டியைக் கொடுத்தல் என்ற வகையில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ஐ) அவரால் அளிக்கப்பட்ட ஏதேனும் கொடை;

(ஒ) அவரால் கொடுக்கப்பட்ட ஏதேனும் நிலவாடகை;

(ஓ) அவர் கொடுப்பதற்குச் சட்டமுறைப்படி கட்டுப்பட்டுள்ள ஏதேனும் ஆண்டுத் தொகை அல்லது வேறு பணத்தொகை;

(ஔ) உண்ணாட்டு அரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் நிருவகிக் கப்படும் ஏதேனும் வரியை, தீர்வையை அல்லது அறவீட்டை, அல்லது அவருக்குச் சொந்தமானதும் அவர் குடியிருப்பதுமான ஒரு வீடு தொடர்பில் கொடுக்கப்பட்ட எவையேனும் வீதவரிகளைத் தவிர, அசைவற்ற ஆதனம் மீது அறவிடப்பட்ட வீதவரிகளை அல்லது வரியைக் கொடுத்தல் என்ற வகையில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(க) ஏதேனும் நீதிமன்றக் கட்டளையின்கீழ் ஏதேனும் பணத்தொகையைக் கொடுத்தல் என்ற வகையில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ங) ஏதேனும் நீதிமன்றத்திலான அல்லது நியாயசபை முன்னரான அல்லது எந்த நடுத்தீர்ப்பாளரது தீர்வை ஏதேனும் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் வலுப்படுத்தப்படுகின்றதோ அந்த நடுத்தீர்ப்பாளர் முன்னரான எவையேனும் நடவடிக்கைகள் சம்பந்தமாகக் கொடுக்கப் பட்ட சட்டவறிஞர் கட்டணங்களும் உறப்பட்ட வேறு செலவுகளும்;

(ச) அவரது குடும்பத்தின் எவரேனும் உறுப்பினரது இறப்பு சம்பந்த மாக ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாது உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ஞ) அவரது அல்லது அவரது எவரேனும் பிள்ளைகளின், அப்பிள்ளை இருபத்தொரு வயதிற்குக் கீழ்ப்பட்டதோ அல்லது இல்லையோ, திருமணம் சம்பந்தமாகப் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாது உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ட) அவர் மருத்துவச் சிகிச்சை பெறுவதில் அல்லது அவரது குடும்பத்திலுள்ள உறுப்பினர் எவருக்கும் மருத்துவச் சிகிச்சை ஏற்பாடு செய்வதில் மூவாயிரம் ரூபாவுக்கு மேற்பட உறப்பட்ட ஏதேனும் செலவினம்; அத்தகைய செலவினம் ஆசுப்பத்திரிக் கட்டணங்கள் அல்லது நோயாளர் பராமரிப்பு இல்லக் கட்டணங்கள், மருத்துவர்களின் கட்டணங்கள், மருந்துச் செலவுகள், தாதிமார்களினதும், கவனிப்பார்களினதும் கட்டணங்கள் தொடர்பானவையாக இருத்தல் வேண்டும்;

(ண) அவருக்கு அல்லது அவரது குடும்பத்தின் எவரேனும் உறுப்பினருக்கு களவினால் அல்லது நெருப்பினால், வெள்ளத்தினால் அல்லது வேறு இயற்கைக் கூறுகளின் காரணத்தால் எழுகின்ற ஏதேனும் நட்டத்தை ஈடுசெய்வதில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்'

(த) அவர் இலங்கைக் குடிமகனாகவில்லாதவிடத்து, அவரது பிள்ளைகளுக்கு வெளிநாடுகளில் கல்வி கற்பிப்பதில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ந) அவர் இலங்கைக் குடிமகனாகவில்லாதவிடத்து, வெளிநாட்டிலுள்ள அவரது இல்லத்திற்குச் செல்லுவதற்கும் திரும்பி வருவதற்குமான அவரதும் அவரது குடும்பத்திலுள்ள எவரேனும் உறுப்பினரதும் பயணச் செலவு;

(ப) தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினருக்கான தேர்தலில் அவர் ஒரு வேட்பாளராயுள்ளவிடத்து, அத்தகைய வேட்பாளர் என்ற முறையில் அவரால் உறப்படுவதற்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதும், அவரால் உறப்பட்டதுமான ஏதேனும் செலவினம்;

(ம) ஏதேனும் ஓய்வூதிய நிதியத்திற்கு அல்லது சகாய நிதியத்திற்கு அளிக்கப்பட்ட ஏதேனும் உதவுதொகை;

(ய) செய்தொழில் வருமானம் பெறும் பிள்ளையினால், அவரது செய்தொழில் வருமானத்தின் அளவு வரை உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(ர) அரசினால் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் கடமைகளை ஆற்றுதல் சம்பந்தமாக, முழுமையாகவும் அவசியமாகவும் உறப்பட்ட ஏதேனும் செலவினம்;

(2) ஏதேனும் செலவினமானது (1) ஆம் உட்பிரிவின்கீழான பந்திகளுள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பந்திகளில் உட்படுகின்றவிடத்து, அப்பந்திகளில் ஏதேனும் ஒன்றில் குறிப்பிடப்படும் செலவினம் மட்டுமே அவ்வுட் பிரிவின்கீழ் அத்தனியாளின் செலவினத்தில் உள்ளடக்கப்படாததாகக் கருதப்படும்.

38உ ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு தனியாளான ஒருவரின் மதிப்பிடற்குரிய செலவினமானது, அத்தகைய மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டில் அவரால் உறப்பட்ட செலவினமாகவிருத்தல் வேண்டும்.

38ஊ. தனியாளொருவர் 1975 ஆம் ஆண்டு ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று தொடங்கி 1975 ஆம் ஆண்டு நவம்பர் 5 ஆம் தேதி முடிவடைகின்றதான காலப்பகுதியுள், பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட ஏதேனும் மீளவராச் செலவினம் உற்றவிடத்து, 1977 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், எழுத்திலான விண்ணப்பமொன்று செய்யப்பட்டால், ஆணையாளர் தலைமையதிபதி தமது தற்றுணிபின் பேரில், அவரது மதிப்பிடற்குரிய செலவினத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய மீளவராச் செலவினம் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு நீடிக்கப்பட அனுமதிக்கலாம்.

38எ. ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான அவரது வரிவிதிப்புக்குரிய செலவினத்தைத் தீர்மானிப்பதில் அம்மதிப்பீட்டாண்டிற்கான தனியாள் ஒருவரின் மதிப்பிடற்குரிய செலவினத்திலிருந்து பின்வரும் விடுதொகைகளைக் கழித்தல் வேண்டும்.—

(அ) அவர் குடும்பமொன்றின் தலைவராக இருக்குமிடத்து, அவர் தொடர்பில் முப்பத்தாறாயிரம் ரூபா விடுதொகையொன்றும், அவரது மனைவி தொடர்பில் நாலாயிரம் ரூபா விடுதொகையொன்றும், அத்துடன் மூன்றிற்கு மேற்படாத ஒவ்வொரு பிள்ளை அல்லது தங்கிவாழும் உறவினர் தொடர்பில் அல்லது, பிள்ளைகளதும் தங்கிவாழும் உறவினர்களதும் தொடர்பில் இரண்டாயிரம் ரூபா விடுதொகையொன்றும்,

(ஆ) அவர், குடும்பமொன்றில் உள்ளடக்கப்படாதவிடத்து அவர் தொடர்பில் முப்பத்தாறாயிரம் ரூபா விடுதொகையொன்றும்,

(இ) அவர், தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினர் ஒருவராக இருக்குமிடத்து பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) இன் கீழ் அவருக்கு ஏற்புடையதான அத்தகைய விடுதொகையும், அத்துடன் 73 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுவனவும் அத்தகைய உறுப்பினரின் இலாபங்களையும் வருமானத்தையும் நிர்ணயிப்பதில் கணக்கிலெடுக்கப்படாதனவுமான அத்தகைய விடுதொகைகளும்.

38ஏ. குடும்பமொன்றின், அக்குடும்பத்தின் தலைவர் தவிர்ந்த உறுப்பினர்களின் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான மதிப்பிடற்குரிய செலவினம் கூட்டுமொத்தமாக்கப்படுதல் வேண்டும். அத்தகைய மதிப்பிடற்குரிய செலவினத்தின் கூட்டுமொத்தத் தொகையானது, அம்மதிப்பீட்டாண்டிற்கு அக்குடும்பத் தலைவரது மதிப்பிடற்குரிய செலவினத்தின் பாகமாக அமைவதெனக் கருதப்படல் வேண்டும். குடும்பத் தலைவரது மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து 38எ என்னும் பிரிவின் கீழ் அவருக்கு உரித்தான விடுதொகையைக் கழித்த பின்னரான அம்மதிப்பீட்டாண்டிற்கான அவரது மதிப்பிடற்குரிய செலவினம், அம்மதிப்பீட்டாண்டிற்கான அவரது வரிவிதிப்புக்குரிய செலவினமாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் குடும்பத் தலைவர், அத்தகையவரி விதிப்புக்குரிய செலவினம் தொடர்பில் செலவின வரிக்கு ஆளாதல் வேண்டும்.

38ஒ. குடும்பமொன்றில் உள்ளடக்கப்படாதவரான தனியாள் ஒருவரின் மதிப்பிடற்குரிய வருமானத்திலிருந்து 38எ என்னும் பிரிவின் கீழ் அவருக்கு உரித்தான விடுதொகையைக் கழித்த பின்னரான அவரது மதிப்பிடற்குரிய செலவினம், அம்மதிப்பீட்டாண்டிற்கான அவரது வரி விதிப்புக்குரிய செலவினமாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அவர், அத்தகைய வரிவிதிப்புக்குரிய செலவினம் தொடர்பில் செலவினவரிக்கு ஆளாதல் வேண்டும்.

38ஓ. வரிவிதிப்புக்குரிய செலவினம் உள்ள வரும், குடும்பமொன்றின் தலைவராக உள்ளவரும் ஆன தனியாள் ஒருவர் தொடர்பிலான செலவின வரி அவரிடமிருந்து சேகரிக்கப்பட முடியாதவிடத்து, அப்போது, அத்தகைய குடும்பத்தில் அவரது மனைவி அல்லது பிள்ளை உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தகைய மனைவியின் அல்லது அத்தகைய பிள்ளையின் மதிப்பிடற்குரிய செலவினத்திற்கு உரியதாகச் சாட்டப்படக்கூடியதென ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றும் செலவின வரியின் அத்தகைய பாகம் ஆனது, அத்தகைய மனைவியிடமிருந்து அல்லது பிள்ளையிடமிருந்து (அத்தகைய மனைவி தொடர்பில் அல்லது பிள்ளை தொடர்பில் மதிப்பீடு எதுவும் செய்யப்படவில்லை என்பது எப்படியிருப்பினும்) சேகரிக்கப்படலாம்; அத்துடன் செலவின வரி சேகரிப்புகளுக்கும் அறவிடுதலுக்கும் ஆன இச்சட்டத்தின் ஏற்பாடுகளும் அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்.

38ஔ. 44, 45, 46, 48, 49, 51, 82, 92, 93, 94, 95, 96, 96அ, 96ஆ, 96இ, 103, 104, 106, 108, 113, 115, 117, 118, 120, 125 என்னும் பிரிவுகளில், வருமானம், மதிப்பிடற்குரிய வருமானம், வருமான வரி என்பனபற்றிய குறிப்பீடு எதுவும், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, முறையே செலவினம், மதிப்பிடற்குரிய செலவினம், செலவின வரி என்பனவற்றுக்கான குறிப்பீட்டை உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

38க. 97 (2) (ஆ) என்னும் பிரிவில் செல்வவரி பற்றிய குறிப்பீடு, செலவின வரி பற்றிய குறிப்பீட்டை உள்ளடக்குவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(4அ) வதிவில்லாத ஆள் ஒருவர் கப்பற்சொந்தக்காரராக அல்லது கப்பல் வாடகைக்கமர்த்துநராகத் தொழில் கொண்டுநடாத்துமிடத்தும், அவருக்குச் சொந்தமாகவுள்ள அல்லது அவரால் வாடகைக்கு அமர்த்தப்படும் ஏதேனும் கப்பலானது இலங்கையிலுள்ள கப்பற்றுறை ஒன்றினை வந்தடையுமிடத்தும், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரட்டிக எது எவ்வாறிருப்பினும், (மீண்டும் கப்பலேற்றுவதற்கென மட்டும் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட பண்டங்களைத்தவிர இலங்கையில் கப்பலேற்றப்பட்ட பிரயாணிகளை, அஞ்சற் பொருட்களை, கால்நடைகளை, அல்லது பண்டங்களை ஏற்றிச் செல்வதற்காகப் பெறப்படுவதற்குரிய முழுப் பணத்தொகையில்

ஆறு சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை, 1975 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய பிரயாணிகளை, அஞ்சற் பொருட்களை, கால்நடைகளை அல்லது பண்டங்களை ஏற்றிச் செல்வதன் மூலம் உண்டாகின்ற முழு இலாபங்களாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இலாபங்கள் இலங்கையில் உண்டாகுவனவாகக் கருதப்படலும் வேண்டும்''.

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:—

"(1) 61 ஆம் பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த, 61 ஆம் பிரிவு தொடங்கி 63 ஆம் பிரிவு வரையுள்ள பிரிவுகளின் ஏற்பாடுகள், அவை, கப்பற் சொந்தக்காரரா அல்லது கப்பல் வாடகைக்கமர்த்துநராகத் தொழில் கொண்டு நடாத்துகின்றவரான வதிவில்லாத ஆள் ஒருவரின் விடயத்தில் ஏற்புடையனவாகின்ற அதே விதத்தில் வான்கலத்தின் சொந்தக்காரராக அல்லது வாடகைக்கமர்த்துநராகத் தொழில் கொண்டு நடாத்துகின்றவரான வதிவில்லாத ஆள் ஒவ்வொருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.''

25. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் தலையங்கம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது:—

"கக. குறிப்பிட்ட சில பங்கிலாபங்கள் தொடர்பிலான விசேட வீத வரிகள்''.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் உட்புகுத்தப்பட்ட தலையங்கத்தை உடனடுத்துப் பின்வரும் பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது ; இது அச்சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதல் வேண்டும் :—

72அ. (1) வதிவில்லாத ஆள் ஒருவர் இலங்கையில் வதிவுள்ள கம்பனியொன்றின் பங்குகளைக் கொள்வனவு செய்வதன்மூலம் செய்யப்படும் முதலீடொன்றிலிருந்து பங்கிலாபமொன்றைப் பெறுகின்றவிடத்து, அப்பங்கிலாபந் தொடர்பிலான வரியானது —

(அ) இலங்கை அரசாங்கத்திற்கும், எவ் அரசாங்கத்தின் ஆள்புல எல்லைக்குள் அத்தகைய ஆள் வதிகின்றாரோ, அவ் அரசாங்கத்திற்கும் இடையே ஏதேனும் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்குமிடத்து அவ்வுடன்படிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய முறையிலும் அத்தகைய அளவிற்கும் குறைக்கப்படலாம்; அத்துடன்

(ஆ) இலங்கை அரசாங்கத்திற்கும், எவ் அரசாங்கத்தின் ஆள்புல எல்லைக்குள் அவ்வாள் வதிகின்றாரோ அவ் அரசாங்கத்திற்கும்

இடையே ஏதேனும் உடன்படிக்கை செய்யப்படாதிருக்குமிடத்து, அமைச்சரினல் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய முதலீட்டின் விடயத்தில் அமைச்சரினல் ஆக்கப்பட்டதும், தேசிய அரசுப் பேரவையினல் அங்கீகரிக்கப்பட்டதும், கசெற்றில் வெளியிடப்படுவதுமான கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய அளவிற்கும் குறைக்கப்படலாம்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''பங்கிலாபம் தொடர்பிலான வரி'' என்பது

(i) இலங்கையில் வதிவுள்ள கம்பனியொன்று, அந்தப் பங்கிலாபந் தொடர்பில் 25ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் எவ்வரித் தொகைக்கு உட்படுகின்றதோ அவ்வரித்தொகை என

(ii) வதிவில்லாத ஏதேனும் கம்பனிக்குக் கொடுக்கற்பாலதாக வருகின்ற ஏதேனும் பங்கிலாபத் தொகையிலிருந்து, 26ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின்கீழ் எவ்வரி ஒவ்வொரு வதிவுள்ள கம்பனியாலும் கழிக்கப்படவேண்டுமோ, அவ்வரி என,

(iii) எவரேனும் பங்குக்காரருக்குக் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் பங்கிலாபத் தொகையிலிருந்து 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், ஒவ்வொரு வதிவுள்ள கம்பனியும் எவ்வரியைக் கழிப்பதற்குரித்துடையதோ அவ்வரி என, அல்லது

(iv) இச்சட்டத்தின்கீழ், அந்தப் பங்கிலாபம் தொடர்பில், வதிவில்லாத கம்பனி தவிர்ந்த எவரேனும் வதிவில்லாத ஆளால் செலுத்தப்படற்பாலதான வரி என,

பொருள்படும்.''.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 73அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இவை முறையே அச்சட்டவாக்கத்தின் 73ஆ, 73இ, 73ஈ, 73உ, 73ஊ, 73எ ஆகிய பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும் :—

73ஆ. ஒரு கம்பனியானது 1976ஆம் ஆண்டு ஏப்பிரில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கிய மதிப்பீட்டாண்டுக்கு முந்திய ஆண்டில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டத்துக்கிணங்க அக்கம்பனியால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சியொன்றில் முதலீடொன்றைச் செய்கின்றவிடத்து, அக்கம்பனி, அம்மதிப்பீட்டாண்டுக்கு அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து —

(i) முதலீட்டுத் தொகைக்கு, அல்லது

(ii) அம்மதிப்பீட்டாண்டுக்கான அக்கம்பனியின் வரி மதிப்பிடற்குரிய வருமானத்தின் பத்துவீதத்துக்கு,

சமமான ஒரு தொகையை, இவற்றுள் எது குறைந்ததோ அதை, கழிவாகக் கழிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் ஏற்பாடுகள், 25 (1ஆ) என்னும் பிரிவின் கருத்துக்குட்பட்ட மக்கள் கம்பனியொன்றுக்கு, அல்லது எக்கம்பனியினல் செலுத்தப்படற்பாலதான வருமானவரி 25 (1) ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத்திற்கிணங்க கணிக்கப்படுகின்றதோ அக்கம்பனிக்கு, ஏற்புடையனவாதலாகாது.

73இ இலங்கையில் ஏதேனும் பொறுப்பு முயற்சியைக் கொண்டு நடாத்தும் ஆள், 1976 ஏப்பிரில் 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிபீட்டாண்டுக்கு முந்திய ஆண்டில், அத்தகைய பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியை இலங்கைக்குக் கொண்டுவந்துள்ளாரென்று ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படும்படி எண்பிக்கின்றவிடத்து, அவர், 73எ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய. அம்மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து —

(i) வெளிநாட்டுச் செலாவணித் தொகைக்கு, அல்லது

(ii) அம்மதிப்பீட்டாண்டிற்கான அப்பொறுப்பு முயற்சியின் வருமானத்திற்கு உரியதெனச் சாட்டப்படக்கூடிய வருமானவரியின் இருபது வீதத்துக்குச்

சமமான ஒரு தொகையை, இவற்றுள் எது குறைந்ததோ அதை, கழிவாகக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "வெளிநாட்டுச் செலாவணி" என்பது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ள அதே கருத்தையுடையதாகும், ஆனல், —

(அ) பண்டங்களை அனுப்புவதன்மூலம் அல்லது சேவைகளை ஆற்றுவதன்மூலம் ஒருவரால் பெறப்பட்ட ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை : அல்லது

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் இலங்கைக்கு அனுப்பும்படி கோரப்படக்கூடிய ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை; அல்லது

(இ) இலங்கை அரசாங்கத்தினல் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினல் இணங்கிக் கொள்ளப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் பயனக அல்லது ஒழுங்கின் பயனகப் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணியை,

உள்ளடக்காது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, 1976 ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டுக்கு, ஒரு பொறுப்பு முயற்சியிலிருந்து பெறப்படும் வருவாய்க்கு உரியதெனச் சாட்டப்படக்கூடிய வருமான வரியான —

(அ) மக்கள் கம்பனி தவிர்ந்த வதிவுள்ள கம்பனியின் விடயத்தில், அந்தக் கம்பனியின் அந்த மதிப்பீட்டாண்டிற்கான மொத்தச் சட்டமுறையான வருமானத்திற்கு அந்தப் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, 25ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள (அ) என்னும் பந்தியின் கீழ் அந்த மதிப்பீட்டாண்டுக்கு இந்தக் கம்பனியால் செலுத்தற்பாலதான வருமான வரிக்குக் கொண்டிருக்கும் பணத்தொகையாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) வதிவில்லாத கம்பனியின் விடயத்தில், அந்தக் கம்பனியின் அந்த மதிப்பீட்டாண்டிற்கான மொத்தச் சட்டமுறையான வருமானத்திற்கு அந்தப் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, 26ஆம் பிரிவின்கீழ் அந்த மதிப்பீட்டாண்டிற்கு அந்தக் கம்பனியால் செலுத்தற்பாலதான வருமான வரிக்குக் (மேலதிக வீதமான 6 சத விகிதத்தின்படி அல்லது 33½ சத விகிதத்தின்படி அப்பிரிவின் கீழ் கணிக்கப்படுகின்ற வாறான அத்தகைய வரியின் அத்தகைய பாகத்தை விலக்கி) கொண்டுள்ள பணத்தொகையாக விருத்தல் வேண்டும்;

(இ) மக்கள் கம்பனியின் விடயத்தில், அந்த மதிப்பீட்டாண்டிற்கான அந்தக் கம்பனியின் மொத்தச் சட்டமுறையான வருமானத்துக்கு அந்தப் பொறுப்புமுயற்சியின் இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ, அதே விகிதாசாரத்தை. 25 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவிலுள்ள (அ) என்னும் பந்தியின் கீழ் அந்தக் கம்பனியால்செலுத்தற்பாலதான வருமான வரிக்குக் கொண்டுள்ள பணத் தொகையாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) வேறெவரேனும் ஆளின் விடயத்தில், அந்த மதிப்பீட்டாண்டுக்கான அந்த ஆளின் மொத்தச் சட்டமுறையான வருமானத்துக்கு அந்தப் பொறுப்பு முயற்சியின் இலாபங்களும் வருமானமும் என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ விகிதாசாரத்தை, அந்த மதிப்பீட்டாண்டிற்கு அந்த ஆளினல் செலுத்தற்பாலதான வருமான வரிக்குக் கொண்டுள்ள பணத் தொகையாக விருத்தல் வேண்டும்.

*73ஈ. (1) 1976* ஏப்பிரில் *1* ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டின் போது, வீடுகளை நிருமாணித்தலும் விற்றலும் அல்லது வீடமைப்பு என்னும்

விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின் கீழ்க் கட்டிட நோக்கங்களுக்காகக் காணியை அபிவிருத்தி செய்தலும், விற்றலும் ஆகிய பொறுப்பு முயற்சியை ஆளொருவர் கொண்டு நடாத்துமிடத்து, அவர் 73எ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அத்தகைய பொறுப்பு முயற்சியிலிருந்து பெறும் வருமானத்திற்கு உரியதாகச் சாட்டப்படக்கூடிய வருமான வரியின் இருபது சத விகிதத்திற்குச் சமமான தொகை, அந்த மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தற்பாலதான வருமான வரியிலிருந்து கழிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயினும், ஏதேனும் வீடு தொடர்பில், 1973 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தியாளர்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் கீழ் எவரேனும் ஆள் வருமான வரியிலிருந்து நிவாரணத்துக்கு உரித்துடையவராகுமிடத்து, அத்தகைய வீடு தொடர்பில் இந்தப் பிரிவின் கீழான கழிவு எதற்கும் அவர் உரித்துடையவராதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காகப் பொறுப்பு முயற்சியொன்றிலிருந்து பெறப்படும் வருமானத்துக்கு உரியதாகச் சாட்டப்படக்கூடிய வருமான வரியானது 73இ (2) என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

73உ. (1) இப்பிரிவானது, இலங்கையில் பின்வருவனவற்றைக் கொண்டு நடாத்துகின்றவரான எவரேனும் ஆளுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்:—

(அ) ஏதேனும் கமத்தொழிற் பொறுப்பு முயற்சி:

(ஆ) மீன் பிடித்தலில், கனிப்பொருட்கள் பிரித்தெடுத்தலில், பொருட்களின் உற்பத்தியில் அல்லது தயாரித்தலிலான ஏதேனும் பொறுப்பு முயற்சி; அல்லது

(இ) ஆணையாளர் தலைமையதிபதியின் கருத்துப்படி (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் பொறுப்பு முயற்சியின் நோக்கங்களை மேம்படுத்துகின்றதான ஏதேனும் பொறுப்புமுயற்சி.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பொறுப்புமுயற்சி, முன்னரே உளதாயிருந்த ஏதேனும் தொழில்முயற்சியைப் பிரிப்பதனல் அல்லது மீளவமைப்பதனல் உண்டாக்கப்பட்ட பொறுப்பு முயற்சியை உள்ளடக்குதலாகாது.

(3) 1976, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கும் ஆண்டில், அத்தேதிக்கு முன்னர் தொடங்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றில் நிறைவேற்றலுவலர்களைத்தவிர தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதெனவும், அத்துடன் அத்தகைய ஆட்கள் தொடர்பில் அத்தகைய ஒவ்வோர் ஆளினதும் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து 1976 திசம்பர் 31 ஆந் தேதிவரை அவ்வாண்டில் ஊழியர் சகாய நிதியத்துக்குத் தொழில்தருநர் உதவு தொகைகள் செலுத்தியுள்ளாரெனவும் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்து,

பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்தும் ஆள் 73எ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, 1977' ஏப்பிரில் ஓராம் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தற்பாலதான வருமானவரியிலிருந்து, 1975 திசெம்பர் 31 ஆந் தேதியன்று தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த ஆட்களின் மொத்த எண்ணிக்கைக்குத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை, பொறுப்புமுயற்சியிலிருந்து பெறும் வருமானத்திற்கு உரியதாகச் சாட்டப்படக்கூடிய வருமான வரியின் இருபது சதவிகிதத்திற்குக் கொண்டுள்ளதான ஒரு தொகை கழிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறுயினும், அந்தப் பொறுப்பு முயற்சிக்கு உரியதாகச் சாட்டப்படக்கூடிய வருமான வரியின் இருபது சதவிகிதத்திற்கு அந்தக் கழிவு மேற்படுதலாகாது.

(4) 1976 சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கும் ஆண்டில் பொறுப்பு முயற்சியொன்று தொடங்கப்பட்டு, அப்பொறுப்பு முயற்சியிலுள்ள எந்த ஊழியர்களின் தொழில் தொடர்பில் தொழிலுக்கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து 1976, திசெம்பர் 31 ஆந் தேதிவரையிலான காலத்திற்கு ஊழியர் சகாய நிதியத்திற்கு அப்பொறுப்பு முயற்சியைக் கொண்டுநடாத்தும் ஆளினுல் உதவுதொகைகள் செலுத்தப்பட்டதோ அந்த ஊழியர்களின் எண்ணிக்கை ஐம்பதிற்குக் குறையாதவிடத்து, அத்தகைய ஆள், 73எ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 1977 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தற் பாலதான வருமான வரியிலிருந்து அப்பொறுப்புமுயற்சியிலிருந்து பெறப்பட்ட வருமானத்திற்கு உரியதாகச் சாட்டப்படக் கூடிய வருமானவரியின் இருபது சதவிகிதத்திற்குச் சமமான தொகையொன்றுன கழிவொன்றிற்கு உரித்துடைவராதல் வேண்டும்.

73ஊ. (1) 1976 ஏப்பிரில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டில் தேயிலையைத் தொகையாக உற்பத்தி செய்வதற்கென அல்லது ஏற்றுமதி செய்வதற்கென, அல்லது கிறீப் இறப்பர், இறப்பர் தகடு, இறப்பர் துண்டு, தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல், கொப்பறு, தேங்காய் அல்லது கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் அமைச்சரினுல் இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் வேறு ஏதேனும் பொருளை உற்பத்தி செய்வதற்கென அல்லது ஏற்றுமதி செய்வதற்கென ஏதேனும் பொறுப்புமுயற்சியைக் கொண்டுநடாத்தும் ஆளொருவர், அம்மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டின்போது அவரால் உற்பத்தி செய்யப்பட்டதான அல்லது ஏற்றுமதி செய்யப்பட்டதான அப்பொறுப்பு முயற்சிக்குரிய பொருட்களின் அல்லது பண்டங்களின் தொகை, 1974 ஏப்பிரில் / ஆந் தேதியன்று தொடங்கும் பன்னிரண்டுமாத காலத்தின்போது அவரால் உற்பத்தி செய்யப்பட்டஅல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட அத்தகைய அல்லது அவற்றையொத்த பொருட்களின் அல்லது பண்டங்களின் தொகைக்கு மேற்பட்டதென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கேற்ப எண்பிக்குமிடத்து, 73 எ எனும் பிரிவின் ஏற்பாடுகட்கு அமைய,

அந்த மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின் அல்லது பொருட்களின் மிஞ்சுதொகை என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தை அந்த மதிப்பீட்டாண்டிற்கு அந்தப் பொறுப்புமுயற்சியிலிருந்து பெறும் வருமானத்திற்குரியதாகச் சாட்டப்படக்கூடிய வருமானவரியின் இருபது வீதத்திற்குக் கொண்டுள்ள ஒரு தொகையை, அந்த மதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்துதப்படற்பாலதான வருமானவரியிலிருந்து கழிக்கப்பட அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, பொறுப்பு முயற்சியொன்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்திற்குரியதாகச் சாட்டப்படக்கூடிய வருமானவரியானது, 73இ (2) என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள முறையில் கணிக்கப்படுதல் வேண்டும்.

73எ. ஆளொருவருக்கு 73இ, 73ஈ, 73உ, 73ஊ என்னும் பிரிவுகளின் கீழ் உரித்துடையதான வருமானவரியிலிருந்து வரும் கழிவுகளின் மொத்தமானது, அப்பிரிவுகளின் ஏற்பாடுகளில்லாவிடின், அம்மதிப்பீட்டாண்டில் அவரால் செலுத்தப்பட்டிருக்கற்பாலதான வருமானவரியின் முப்பத்தி மூன்றெடு மூன்றிலொரு வீதத்தை விஞ்சலாகாது.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''வருமானவரி'' என்பது—

(அ) மக்கள் கம்பனியொன்றல்லாத வதிவுள்ள கம்பனியொன்றின் விடயத்தில், 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அக்கம்பனியினாற் செலுத்தப்படற்குரிய வருமானவரியையும்,

(ஆ) வதிவில்லாத கம்பனியொன்றின் விடயத்தில், 6 சதவீதம் என்ற மேலதிக வீதத்தில், அல்லது 33 1/3 என்ற வீதத்தில் அப்பிரிவின் கீழ் கணிக்கப்படுகின்றதும், 26 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்குரியதுமான வரியின் அத்தகைய பாகத்தையும், அத்துடன்

(இ) மக்கள் கம்பனியொன்றின் விடயத்தில், 25 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திபின் கீழ் செலுத்தப்படற்குரிய வருமானவரியையும்,

உள்ளடக்காது.' '

27. முதன்மைச்சட்டவாக்கத்தின் 107 தத என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 107 ததத என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:—

107 ததத. 1976 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டாண்டு தொடர்பில்—

(1) ''குறித்துரைக்கப்பட்ட ஊழியர்'' என்பது—

(அ) மாதமொன்றிற்கு எழுநூற்றி ஐம்பது ரூபாவிற்கு மேற்பட்ட அல்லது ஆண்டொன்றிற்கு ஒன்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட ஊதியத்தைப் பெறுகின்ற எவரேனும் தனியாள் என்று; அல்லது

(ஆ) இலங்கையிற் செய்த சேவைக்காக மாதமொன்றிற்கு எண்பத்தைந்து ரூபாவிற்கு மேற்பட்ட அல்லது ஆண்டொன்றிற்கு ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட ஊதியத்தைப் பெறுகின்ற வதிவில்லாத எவரேனும் தனியாள் என்று,

(2) 107ஈ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது; அத்துடன்

(3) 107உ என்னும் பிரிவிலுள்ள (2) ஆம், (3 ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாதலாகாது''.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) ''பிள்ளை'' என்பதற்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:—

''இச்சட்டம் ஏற்புடைத்தான ஒருவர் தொடர்பில் ''பிள்ளை'' என்பது—

(1) 1974, ஏப்பிரில் 1 ஆந் தேதிக்குப் பிந்தாமல் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டு தொடர்பில் அத்தகைய முற்போந்த ஆண்டில் இருபத்தைந்து வயதிற்குக் குறைந்த ஒரு பிள்ளை எனவும்,

(2) 1975, ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு முற்போந்த ஆண்டு தொடர்பில், அத்தகைய முற்போந்த ஆண்டில் இருபத்தொரு வயதிற்குக் குறைந்த ஒரு பிள்ளை எனவும்,

பொருள்படுவதோடு—

(அ) அத்தனியாளின் மறுதுணைப்பிள்ளை யொன்றையும்,

(ஆ) மகவேற்புக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையால் அந்தத் தனியாளினல் மகவேற்கப்படுவதற்கென அதிகாரமளிக்கப்படும் பிள்ளையொன்றையும், அத்துடன் அந்தத் தனியாள் இலங்கைக் குடிமகனுக இல்லாதவிடத்து, அவர் எந்நாட்டுப் பிரசையாக அல்லது குடிமகனுக உள்ளாரோ அந் நாட்டுச் சட்டத்திற்கிணங்கத் தன்னுல் மகவேற்கப்பட்ட பிள்ளையொன்று தனக்குண்டெனவும் ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துமிடத்து, அத்தகைய பிள்ளையையும்,

உள்ளடக்கும்; ஆனுல்—

(i) மகவேற்கப்பட்ட வேறு பிள்ளை,

(ii) மணமானதொரு பிள்ளை,

(iii) பெற்றோரிலிருந்து விலகி வாழ்ந்து பெற்றோராற் பராமரிக்கப்படாததொரு பிள்ளை, அல்லது

(iv) சட்டமுறையற்ற பிள்ளை,

என்போரை உள்ளடக்காது;'';

(ஊ) 1976, ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டிற்கும் —

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் முதல் 15,000 ரூபாவின்மீது 15 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின்மீது 20 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 6.000 ரூபாவின்மீது 25 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின்மீது 30 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 6,000 ரூபாவின்மீது 40 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் மிகுதியின்மீது 50 சதவீதம். அத்துடன்:''

(2) ''கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் —

கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் வரி செலுத்துவதற்குரிய வருமானம் 45 சதவீதம்'',

என்னும் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலமும் :—

''1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டனவான அல்லது பதிவுசெய்யப்பட்டனவெனக் கருதப்படும் கூட்டுறவுச்சங்கங்கள்

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டனவான அல்லது பதிவுசெய்யப்பட்டனவெனக் கருதப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் வரிசெலுத்துவதற்குரிய வருமானம் —

1974 ஏப்பிரில் 1ஆந் தேதிக்குப் பிந்தாமல் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கு 45 சதவீதம்

1975, ஏப்பிரில் 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கு 35 சதவீதம்''.

30. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வட்டவணையின் V ஆம் பாகத்திற்குப் பதிலாகப் பின்வருவதை இடுவதன்மூலமும்:

''பாகம் V

1971 ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்கும், அடுத்துவரும் மூன்று மதிப்பீட்டாண்டுக்குள் ஒவ்வொன்றுக்குமான வருமானவரி வீதங்கள் பின்வருமாறிருத்தல் வேண்டும்:—

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் முதல் 1800 ரூபாவின்மீது $7\frac{1}{2}$ சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 1800 ரூபாவின்மீது 10 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது $12\frac{1}{2}$ சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது 15 சதவீதம்.

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது $17\frac{1}{2}$ சதவீதம்.

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது 20 சதவீதம்,

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 25 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 4800 ரூபாவின்மீது 30 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின்மீது 40 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 10800 ரூபாவின்மீது 50 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 10800 ரூபாவின்மீது 60 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் மிகுதியின்மீது 65 சதவீதம்; அத்துடன்''

(2) அவ்வட்டவணையின் V ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வருவதை உட்புகுத்துவதன் மூலமும் :—

"பாகம் VI

1975, ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று தொடங்கும் மதிப்பீட்டாண்டிற்குரிய வருமானவரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் முதல் 1800 ரூபாவின்மீது $7\frac{1}{2}$ சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 1800 ரூபாவின்மீது 10 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது $12\frac{1}{2}$ சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது 15 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது $17\frac{1}{2}$ சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 2400 ரூபாவின்மீது 20 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 25 சதவீதம்

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 4800 ரூபாவின்மீது 30 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின்மீது 40 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின்மீது 50 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின்மீது 60 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின்மீது 70 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் மிகுதியின்மீது 75 சதவீதம்.''

பாகம் VII

1976, ஏப்பிரில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரிவீதங்கள் பின்வருமாறு இருத்தல்வேண்டும்: —

வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் முதல் 1800 ரூபாவின்மீது $7\frac{1}{2}$ சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 1800 ரூபாவின்மீது 10 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது $12\frac{1}{2}$ சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 15 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 20 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 25 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 30 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 3600 ரூபாவின்மீது 35 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 4800 ரூபாவின்மீது 40 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் அடுத்த 7200 ரூபாவின்மீது 45 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய வருமானத்தின் மிகுதியின்மீது 50 சதவீதம்.''.

31. முதன்மைச்சட்டவாக்கத்தின் ஆறுவது அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணை இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் ஏழாம் அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும்: —

"ஏழாம் அட்டவணை
செலவின வரி வீதங்கள்

வரிசெலுத்துவதற்குரிய செலவினத்தின் முதல் 6000 ரூபாவின்மீது 10 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய செலவினத்தின் அடுத்த 6000 ரூபாவின்மீது 25 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய செலவினத்தின் அடுத்த 6000 ரூபாவின்மீது 50 சதவீதம்
வரிசெலுத்துவதற்குரிய எல்லாச் செலவின மிகுதியின் மீது 100 சதவீதம்.''

## "1976ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, மக்கள் குடியிருப்புச் சட்டத்திலிருந்து சில பகுதிகள்"

**குறித்த சில சங்கங்களை மக்கள் குடியிருப்புகளாகப் பதிவுசெய்வதற்கும், மக்கள் குடியிருப்புக்களின் பதிவு ஒழுங்குபடுத்துகை, மேற்பார்வை என்பவற்றிற்கென மக்கள் குடியிருப்பு ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற்கும், மக்கள் குடியிருப்பு சம்மேளன மொன்றை உருவாக்குவதற்கும், மேற்சொல்லப்பட்ட கருமங்களின் இடைநேர்வினை வான அல்லது அவற்றோடு தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்.**

1. இச்சட்டம் 1976ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, மக்கள் குடியிருப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப் படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியதான (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

### பாகம் I
### பதிவு

2. (அ) ஒன்பதாம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன்

(ஆ) (i) இலங்கைப் பிரசைகளாகவுள்ளவர்களையும் ;

(ii) பதினெட்டு வயதிற்குக் குறையாதவர்களையும் ; அத்துடன்

(iii) ஒன்பதாம் பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள குறிக்கோள்களைக்கொண்ட ஒரு சங்கத்தின் விடயத்தில், இச்சட்டத்தின் நெறிகளுக்கு இணங்கவும், மக்கள் குடியிருப்பு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் வேலைசெய்வதற்கு உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளவர்களையும்,

உறுப்பினர்களைக் கொண்டதுமான,

ஏதேனும் சங்கம் இச்சட்டத்தின்கீழ் மக்கள் குடியிருப்பொன்றாக மக்கள் குடியிருப்பு ஆணைக்குழுவால் பதிவுசெய்யப்படலாம்

6 (1) 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் மக்கள் குடியிருப்புச் சங்கமொன்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சங்கமும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மக்கள் குடியிருப்பொன்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளதெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மக்கள் குடியிருப்பின் துணைவிதிகள், இச்சட்டத்தின் வெளிப்படையான ஏற்பாடுகளுக்கு முரணாகவில்லாத அளவிற்கு, இச்சட்டத்தின்கீழ் திருத்தப்படும்வரை அல்லது நீக்கப்படும்வரை, தொடர்ந்தும் வலுவிலிருத்தல் வேண்டும்.

(2) 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதும், இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மக்கள் குடியிருப்பொன்றாகக் கருதப்படுகின்றதுமான மக்கள் குடியிருப்பொன்றினுல் —

(அ) வைத்திருக்கப்படும் எல்லா ஆதனங்களும், அத்துடன்

(ஆ) செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் அல்லது உடன்படிக்கையின்கீழ் அதற்குள்ள எல்லா உரிமைகளும் பொறுப்புக்களும்,

நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய மக்கள் குடியிருப்பால் வைத்திருக்கப்படல்வேண்டும் என்பதுடன், அதற்குக் கைமாற்றப்படலும் வேண்டும்.

7. சங்கமொன்றை மக்கள் குடியிருப்பொன்றாகப் பதிவுசெய்தலானது, எத்தகைய பெயரின்கீழ் அது பதிவுசெய்யப்படுகின்றதோ அத்தகைய பெயரையும், இடையருவழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக ஆக்குவதுடன், ஆதனங்களை வைத்திருப்பதற்கும், ஒப்பந்தங்களைச் செய்வதற்கும், வழக்குகளையும் ஏனைய சட்ட நடவடிக்கைகளையும் தொடுப்பதற்கும், எதிர்வாதிடுவதற்கும், அதன் அமைப்பின் நோக்கத்திற்கு அவசியமான எல்லாவற்றையும் செய்வதற்கும் தத்துவமுடையதான கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருக ஆக்குதலும் வேண்டும்,

## பாகம் II

## குறிக்கோள்களும், தத்துவங்களும், பணிகளும்

9. மக்கள் குடியிருப்பொன்றின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) (i) கமத்தொழிற்காணியின் கூட்டுமுகாமை, அபிவிருத்தி என்பவற்றையும், விலங்குவேளாண்மை, கமத்தொழிலடிப்படையிலான கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றினது கூட்டு அபிவிருத்தியையும் வளர்த்தல்,

(ii) வேலைப் பேற்றின் தரத்தினதும், அளவினதும் வீதாசாரத்தில் ஆகக்கூடிய தொழில்வாய்ப்புக்களையும் இலாபப் பகிர்வினையும் பெறுவதற்காக கமத்தொழில் காணியின் ஆகக்கூடிய விளைவுப் பெருக்கத்தினையும், ஆகக்கூடிய பயன்பாட்டையும் உறுதிப்படுத்தல்,

(iii) உறுப்பினர்களின் சமூக, பண்பாட்டு அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்,

(iv) அடுத்துள்ள கமத்தொழிற் காணிகளின் சொந்தக்காரர்கள் அல்லது பயிர்செய்வோர் ஒருங்கிணைந்து பண்ணை நடாத்தலை ஊக்குவித்தலும் மேம்படுத்தலும் ; அல்லது

(ஆ) கமத்தொழில் எந்திரங்கள், கருவிகள், உபயோகப்பொருள்கள் என்பவற்றையும் அத்தகைய வேறு சேவைகளையும் உறுப்பினர்களுக்கு வழங்கல்.

10, *(1)* மக்கள் குடியிருப்பொன்றன் குறிக்கோள்களை எய்தும் நோக்கங்களுக்காக அதற்குத் தேவைப்படும் காணியானது —

(அ) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து,

(ஆ) ஏதேனும் அரச நிறுவனத்திடமிருந்து, அல்லது

(இ) வேறேதேனும் மூலத்திலிருந்து,

குத்தகை என்ற வகையில் பெற்றுக்கொள்ளப்படலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குத்தகையொன்று முடிவடையுமுன்னர், மக்கள் குடியிருப்பானது. அத்தகைய காணியைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிபெறுவதற்காக மக்கள் குடியிருப்பு ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் செய்யலாம் என்பதுடன், அத்தகைய ஆணைக்குழுவானது, மக்கள் குடியிருப்பு அதன் குறிக்கோள்களைத் திருப்திகரமாக எய்தியுள்ளது எனத் திருப்திப்பட்டால், அத்தகைய அனுமதியை வழங்கலும் வேண்டும். அனுமதி வழங்க மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு மறுப்பதற்கு எதிரான மேன்முறையீடு அமைச்சருக்குச் செய்யப்படக்கூடியதாதல் வேண்டும். அத்தகைய மேன்முறையீட்டின்மீதான அமைச்சரின் முடிவு முற்றானதும் இறுதியானதுமாதல் வேண்டும்.

11. மக்கள் குடியிருப்பால் தீர்மானிக்கப்படக்கூடியனவான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது வதிவு நோக்கங்களுக்காக உறுப்பினரொருவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்படக்கூடியதான முப்பது பேர்ச்சுக்களை விஞ்சாத ஒரு காணிப்பரப்பைத் தவிர, மக்கள் குடியிருப்பொன்றினால் வைத்திருக்கப்படும் எக்காணியும் மக்கள் குடியிருப்பின் எவரேனும் தனிப்பட்ட உறுப்பினரின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படலாகாது.

12. மக்கள் குடியிருப்பொன்று, அதற்கு இச்சட்டத்தால் அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், பணிகள் என்பவற்றுடன் கூடுதலாக, அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது உகந்தனவான, அல்லது துணைவிதிகளால் அதற்கு அளிக்கப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம், அத்துடன் பணிகளையும் ஆற்றலாம்.

## பாகம் III

### உறுப்பினர்களின் கூட்டங்கள், முகாமைப்பேரவை, உறுப்பினர்களின் உரிமைகளும் சிறப்புரிமைகளும், உறுப்பாண்மையை முடிவுறுத்தல் என்பன.

14, *(1)* (இதனகத்துப்பின்னர் ''பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைப் பேரவையொன்றை ஒவ்வொரு மக்கள் குடியிருப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.

24. *(1)* (இச்சட்டத்தில் ''சம்மேளனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) எல்லா மக்கள் குடியிருப்புக்களையும் கொண்டதான மக்கள் குடியிருப்புக்கழகம் ஒன்று இருத்தல்வேண்டும்.

(2) அச்சம்மேளனம் —

(அ) மக்கள் குடியிருப்புக்களின் கொள்கைகளை வகுப்பதில் பங்குபற்றலும்,

(ஆ) கமத்தொழில் எந்திரங்கள், கருவிகள், உபயோகப்பொருள்கள் என்பவற்றை வழங்குவதிலும் விநியோகிப்பதிலும் உறுப்பினர்களுக்கான அத்தகைய வேறு சேவைகளை ஏற்பாடு செய்வதிலும் உதவி புரிதலும்,

(இ) உறுப்பினர்களின் விளைபொருட்களைச் சந்தைப்படுத்தலில் உதவிபுரிதலும், அத்துடன்

(ஈ) ஒழுங்குவிதிகளால் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும்,

வேண்டும்.

## பாகம் IV
## நிதி

25. மக்கள் குடியிருப்பொன்றின் மூலதனமானது —

(அ) உறுப்பினர்களால் வைத்திருக்கப்படும் பங்குகளின் பெறுமதியையும்;

(ஆ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தில் நிலையான வைப்புக்களிலும் நடப்புக் கணக்குகளிலும் உள்ள மக்கள் குடியிருப்பின் வரவிற்கிருக்கும் வைப்புப் பணத்தொகைகளையும் ;

(இ) மக்கள் குடியிருப்பொன்றால் கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தையும் ;

(ஈ) நிலையானவையும் அசைவுள்ளவையுமான சொத்துக்களையும் ; அத்துடன்

(உ) இலாபங்களையும் ஒதுக்குநிதிகளையும் —

உள்ளடக்கல் வேண்டும்.

26. ஒவ்வொரு மக்கள் குடியிருப்பும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடி செய்யப்படும் கணக்காய்வின் மூலம் நிச்சயிக்கப்படக் கூடியவாறு ஏதேனும் நிதியாண்டிற் பெறப்படும் இலாபங்களிலிருந்து, பின் வரும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தவென பணத்தொகைகளைக் குறித்து வைத்தல் வேண்டும் :—

(அ) மக்கள் குடியிருப்பின் அபிவிருத்திக்கு ;

(ஆ) உறுப்பினர்களிடையே பங்கிலாபங்களாகவும், இடைக்காலப்பங்கிலாபங்களாகவும் பகிர்வதற்கும், உறுப்பினர்களுக்கு மிகையூதியங்களாகக் கொடுப்பனவு செய்வதற்கும் ;

(இ) உறுப்பினர்களின் நல்வாழ்வுக்கு ;

(ஈ) பொதுச் செலவினத்துக்கு ; அத்துடன்

(உ) ஒதுக்குநிதிகளாக.

27. *(1)* ஒவ்வொரு மக்கள் குடியிருப்பினதும் கணக்குகளை ஒவ்வோராண்டிலும் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு கணக்காய்வு செய்தல்வேண்டும், அல்லது அதன் சார்பிலான எழுத்திலுள்ள பொதுவான அல்லது சிறப்பான கட்டளைமூலம் அதனல் அதிகாரமளிக்கப் படும் ஓர் ஆளினல் கணக்காய்வு செய்வித்தல் வேண்டும்.

28. *(1)* மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு, அதன் சொந்தப் பிரேரணையின்மூலம் மக்கள் குடியிருப்பின் அமைப்பு, தொழிற்பாடு, நிதி நிலைமை என்பன தொடர்பில் விசாரணை செய்யலாம், அல்லது அதன் சார்பிலான எழுத்திலுள்ள கட்டளையின்மூலம் அதிகாரமளிக்கப்படும் ஓராளை அவ்வாறு செய்யும்படி பணிக்கலாம்; அத்துடன் மக்கள் குடியிருப்பொன்றின் பெரும்பான்மை உறுப்பினர்களினற் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அவ்வாறு செய்தலும் வேண்டும்.

29. *(1)* ஏதேனும் மக்கள் குடியிருப்பின் பேரவை அதன் கடமைகளைத் தகுந்த முறையில் புரியவில்லையென 28ஆம் பிரிவின்கீழ் நடைபெற்ற விசாரணையின் பின்னர் மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு கருதினல், பேரவையைக் கலைப்பதற்கு எதிரான ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் அதனைக் கூறுவதற்குப் பேரவைக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தபின்னரும், மக்கள் குடியிருப்பினல் கூட்டப்பட்ட அதன் பொதுக்கூட்டத்தில் அத்தகைய ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்தபின்னரும், எழுத்திலான கட்டளையின்மூலம் —

(அ) பேரவையைக் கலைக்கலாம் ; அத்துடன்

(ஆ) மக்கள் குடியிருப்பின் அலுவல்கள் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நியமிக்கப்படும் பொருத்தமான ஓர் ஆளினல் அல்லது ஆட்களினல் முகாமை செய்யப்படலும், நிருவகிக்கப் படலும் வேண்டுமெனப் பணிக்கலாம்.

30. *(1)* மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு—

(அ) 28 ஆம் பிரிவின்கீழான விசாரணையின் பின்னர்,

(ஆ) மக்கள் குடியிருப்பொன்றின் நாலில் மூன்று பங்கு உறுப்பினர்களால் செய்யப்படும் விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டவிடத்தும், அத்தகைய மக்கள் குடியிருப்பின் ஆட்சேபனைகளைக் கூறுவதற்கு அதற்குச் சந்தர்ப்பம் அளித்தபின்னரும்,

அம்மக்கள் குடியிருப்பு கலைக்கப்படவேண்டுமெனக் கருதினல், அதன் கைப்பட ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் மக்கள் குடியிருப்பின் பதிவை இல்லாதாக்கலாம்.

*(2)* மக்கள் குடியிருப்பொன்றின் எவரேனும் உறுப்பினர். *(1)* ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், அத்தகைய கட்டளைக்கெதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

## பாகம் V

### மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு

33. *(1)* (இதன்பின்னர் இச்சட்டத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மக்கள் குடியிருப்பு ஆணைக்குழு ஒன்று தாபிக்கப்படல் வேண்டும்; இது *34* ஆம் பிரிவின் கீழ் அப்போதைக்கு ஆணைக்குழுவின் உறுப்பினர் களாகவுள்ள ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* ஆணைக்குழுவானது, *(1)* ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித் தொதுக் கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையும், இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரைக்கொண்டு அது வழக்குத் தொடுக் கலாம், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

34. *(1)* ஆணைக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

*(அ)* அமைச்சரால் நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்கள்; அவர்களுள் இருவராவது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

*(ஆ)* மக்கள் குடியிருப்புச் சம்மேளனத்தால் தெரிவுசெய்யப்படும் மூன்று உறுப்பினர்கள்.

*(2)* ஆளொருவர்—

*(அ)* அவர் தேசிய அரசுப் பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது உறுப்பினராகவரின், அல்லது

*(ஆ)* ஆணைக்குழுவினுல் அல்லது அதன் சார்பில் அல்லது ஏதேனும் மக்கள் குடியிருப்பினுல் அல்லது அதன் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழ் அவர் நேரடியாகவோ மறைமுகமாக வோ ஏதேனும் உரிமையைக் கொண்டுள்ளவராகவிருப்பின் அல்லது நன்மையைத் துய்ப்பவராகவிருப்பின்; அல்லது

*(இ)* ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகத் தமது பணிகளை ஆற்று வதனைப் பங்கமானமுறையில் பாதிக்கும் சாத்தியமுடைய அத்தகைய ஏதேனும் பணியை அல்லது வேறு ஏதேனும் அக்கறையை உடைய வராகவிருப்பின் -

ஆணைக் குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு உறுப்பினரொருவராகத் தொடர்ந்து இருப்பதற்குத் தகைமையற்ற வராதல் வேண்டும்.

35. *(1)* ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பதன் மூலம், பதவியிலிருந்து விலகுவதன் மூலம் அல்லது அத்தகைய பதவியிலிருந்து அமைச்சரினுல் நீக்கப் படுவதன் மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினுலன்றி. அல்லது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உறுப்பினராகவுள்ள உறுப்பினரொருவரின் விடயத் தில், அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினராக இல்லாதொழிந்தாலன்றி, சாதாரணமாக மூன்றுண்டுக்காலப்பகுதியொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும்.

36. (1) அமைச்சர், 34ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு உறுப்பினர் எவரையும் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காரணங்கள் காட்டாமல் அகற்றுவது உகந்ததெனக் கருதினால், அவ்வாறு செய்யலாம்.

(3 ஒராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் உறுப்பினரை அகற்றுதலானது, நீதிமன்றமெதனிலும் அல்லது நியாயசபை எதனிலும் எழுத்தாணை மூலமாகவோ வேறுவிதமாகவோ கேள்விக்குட்படுத்தப்படலாகாது.

38. (2) அமைச்சர், ஆணைக்குழு உறுப்பினருள் ஒருவரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும். ஆணைக்குழுவின் எக்கூட்டங்களில் தவிசாளர் சமுகமாய் இருக்கின்றாரோ அக்கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் அவரே தலைமை வகித்தல் வேண்டும் ஆணைக்குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயில்லாத விடத்து சமுகமாயிருக்கும் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் எவரேனும் உறுப்பினர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(5) அமைச்சர், எக்காரணமும் காட்டாமல், ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தை முடிவுறுத்தி. அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

41. (1) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுச் செயலாளரொருவரை நியமிக்கலாம்.

43. ஆணைக்குழுவின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாதல் வேண்டும்.

45. (1) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பெயரில் அரச சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும் அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், அதே விதமான சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலத்துக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரின்தும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினதும் சம்மதத்துடன், அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினாலும் ஆணைக்குழுவினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக் கூடியவாறான சகாய நிதிய உரிமைகள் தொடர்பிலானவை உட்பட்ட அத்தகைய நியதிகளின் மீதும், ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ நியமிக்கப்படலாம்.

46. (1) ஆணைக்குழுவானது. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன், இச்சட்டத்தினைச் செயற்படுத்துவதற்குத் தகுதியானவையென அது கருதுகின்ற அத்தகைய பணிப்புக்களை, காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் எவ்வலுவலர்களினதும், ஆலோசகர்களினதும் சேவைகள் ஆணைக்

குழுவிற்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றதோ அவ்வலுவலர்களுக்கும், ஆலோசகர்களுக்கும் விடுக்கலாம் என்பதுடன், அத்தகைய ஆட்கள் அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான ஆணைக்குழுவின் பணிப்புக்களை நிறைவேற்றுகின்ற ஒவ்வோராளும் ஆணைக்குழுவின் முகவராகச் செயலாற்றுகின்றார் எனக் கருதப்படல் வேண்டும்.

47. ஆணைக்குழு பின்வரும் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் வேண்டும் அவையாவன:—

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமெதனையும் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், கொடுத்து மாற்றல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அல்லது வேறுவிதமாகக் கையாளுதல்;

(ஆ) ஏதேனும் கமத்தொழிற் காணியுடன் சம்பந்தப்பட்டவையும் அது தொடர்பிலானவையுமான நுண்ணாய்வுகளையும் ஆய்வுகளையும் நிறைவேற்றித் தரவுகளைப் பதிதலும், கமத்தொழிற் காணியுடன் சம்பந்தப்பட்டதும் அது தொடர்பிலானதுமான விபரத்திரட்டை விதிக்கப்பட்ட படிவத்தில் தருமாறு கேட்டலும்;

(இ) நிலவுரிமைமுறை, காணிச்சீர்திருத்தம் என்பன தொடர்பிலான எல்லா அம்சங்கள் பற்றியும் ஆராய்ச்சிகளை நடாத்தலும், அவற்றிற்கு உதவிபுரிதலும், அவற்றை ஊக்குவித்தலும்;

(எ) நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனாகப் பெறுதல்;

(ஐ) அதன் நோக்கங்களுக்கு உடனடியாகத்தேவைப்படாத பணத்தைக் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களிலுள்ள அல்லது அரசாங்க உத்தரவாதமுடைய அத்தகைய கணக்குகளிலும், முதலீடுகளிலும், பிணைப்பொறுப்புக்களிலும், முதலீடுசெய்தலும் கையாளுதலும்;

(ஒ) மக்கள் குடியிருப்புக்களைப் பதிவுசெய்தல்;

(ஓ) மக்கள் குடியிருப்புக்களினதும், சம்மேளனத்தினதும் வேலையை மேற்பார்வையிடுதலும், ஒழுங்குபடுத்தலும்;

(ஔ) மக்கள் குடியிருப்புக்களுக்கும், சம்மேளனத்திற்கும் முகாமை ஆலோசனையையும், தொழில்நுட்ப அறிவையும், நிபுணத்துவத்தையும் ஏற்பாடு செய்தல்;

(க) மக்கள் குடியிருப்புக்களினதும், சம்மேளனத்தினதும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும் அல்லது கணக்காய்வு செய்வித்தலும், அந்நோக்கத்திற்காக அவசியமானதென அது கருதும் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தலும்;

(ங) மக்கள் குடியிருப்பொன்றின் பேரவை அதன் கடமைகளைத் தகுந்த முறையில் நிறைவேற்றவில்லை எனத் திருப்திப்படும்போது அத்தகைய பேரவையைக் கலைத்தலும் அதனிடத்தில் வேறொரு பேரவையைத் தெரிவு செய்யும்படி கட்டளையிடுதலும்;

(ச) மக்கள் குடியிருப்பொன்று இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் அல்லது துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணுனவகையில் செயலாற்றுகின்றது என, அல்லது அதன் குறிக்கோள்களை எய்துவதற்குத் தவறியுள்ளது எனத் திருப்திப்படும்போது அம் மக்கள் குடியிருப்பின் பதிவை இல்லாதாக்குதல்;

(ஞ) மக்கள் குடியிருப்புக்களுக்குப் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களை விடுத்தல்;

49. (1) ஆணைக்குழுவின் தொடக்க மூலதனம் இரண்டு கோடி ரூபாவாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் தொடக்க மூலதனத் தொகையானது, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர், அமைச்சரின் ஆலோசனையுடன் தீர்மானிக்கக்கூடியவாறுன அத்தகைய தவணைக்கட்டணங்களில் திரட்டு நிதியத்திலிருந்து ஆணைக்குழுவிற்குக் கொடுக்கப்படலாம்.

(3) தேசிய அரசுப் பேரவையின் தீர்மானத்தின் மூலம் ஆணைக்குழுவின் மூலதனம் காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்படலாம்.

50. (1) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தை உடையதாயிருத்தல் வேண்டும்.

(2) (அ) ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்கெனத் தேசிய அரசுப் பேரவையால் காலத்திற்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாத் தொகைகளும்;

(ஆ) ஆணைக்குழு அதன் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும் ஆற்றுவதிலும் புரிவதிலும் அதனுல் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(இ) காலத்திற்குக்காலம் அமைச்சரினுல் ஆணைக்குழுவுக்கு முற்பணமாகக் கொடுக்கப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும்,

ஆணைக்குழுவின் நிதியத்திற்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

51. ஆணைக்குழுவின் நிதியாண்டானது, ஒவ்வோராண்டும், சனவரிமாதம் முதலாம் நாளன்று தொடங்கும் பன்னிரண்டு மாத காலமாதல்வேண்டும்.

52. 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் IIஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

54. இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குட்பட, ஆணைக்குழு அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்ருகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படலும்வேண்டும்.

## பாகம் VI
## பொது

55. (1) இச்சட்டத்தின் நெறிகளையும், ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக அவசியமாகவுள்ளனவும், எந்நெறிகளும் ஏற்பாடுகளும் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்நெறிகளும் ஏற்பாடுகளும் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினல் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியில் அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறிப்பிடப்படக்கூடியவாருன அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனத் தேசிய அரசப் பேரவையின் முன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்கு விதி எதுவும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனல் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கம் இல்லாமல் நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியில் அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

56. அமைச்சர், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அவர் அவசியமானவையெனக் கருதுகின்றவாருன எழுத்திலான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களை ஆணைக்குழுவுக்கு விடுக்கலாம் என்பதுடன், ஆணைக்குழு அத்தகைய பணிப்புக்களுக்குப் பயன்கொடுத்தலும்வேண்டும்

59. ஆணைக்குழுவின் தேவை எதற்கும் அசைவற்ற ஆதனம் எதுவும் கொள்ளப்படல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டு, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அவ்வுத்தேசக்கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்து அவ்வாதனமானது பொதுத் தேவைக்காகத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க காணிகொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு ஆணைக்குழுவுக்குக் கைமாற்றவும்படலாம்.

## காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணச் சட்டம் 1976ன் எண் 28ல் இருந்து சில பகுதிகள்

**எவ்விடப்பரப்புகளில் அரசினுல் முழுதாக அல்லது பகுதியளவில் நிதியேற்பாடு செய்யப் பட்ட குறித்த சில அபிவிருத்தித் திட்டங்கள் அமைக்கப்பட்டமை காரணமாக காணிப் பெறுமதி உயர்ந்துள்ளதோ அவ்விடப்பரப்புகளில் உள்ள காணிகள் மீது பெறுமதி யுயர்வுக் கட்டணங்களை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதனேடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான வொரு சட்டம்.**

1. இச்சட்டம், *1976* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க. காணிப் பெறுமதி யுயர்வுக் கட்டணச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதோடு, கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும் (அது இதனகத்துப் பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' என்று குறிப்பீடுசெய்யப்படும்)

2. இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பவடுதற்கமைய, பின்வருவன வற்றின் மீது காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணம் என்று கூறப்படும் கட்டணம் விதிக்கப்பப்படும் : -

(அ) இச்சட்டத்தின் *3* ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை யொன் றின் மூலம் பெறுமதியுயர்ந்த இடப்பரப்பாக வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள ஒவ்வொரு காணியும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் *17* ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளை யின் மூலம் பயன்பெற்ற இடப்பரப்பு என வெளிப்படுத்தப்பட்டுள்ள வோர் இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள ஒவ்வொரு கமத்தொழிற் காணியும்.

### பாகம் I — பெறுமதியுயர்ந்த இடப்பரப்புகள்

3. *(1)* எந்த இடப்பரப்பிலும் உள்ள அபிவிருத்தித் திட்டமொன்று அமைக்கப்பட்டமை அல்லது தாபிக்கப்பட்டமை அல்லது அதற்குச் சீர்திருத்தம் செய்யப்பட்டமை காரணமாக, அந்த இடப்பரப்பிலுள்ள காணியின் பெறுமதி உயர்ந்திருக்குமிடத்தும் அல்லது உயரக்கூடியதாகவிருக்குமிடத்தும், அத்துடன் அங்ஙனம் அமைத்தற்காக, தாபித்தற்காக அல்லது சீர்திருத்துதற்காக உறப் பட்ட செலவு, முழுதாக அல்லது பகுதியளவில் அரசினுல் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றினுல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமிடத்தும், அமைச்சர் கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய இடப்பரப்பை ' பெறுமதி யுயர்ந்த இடப்பரப்பு'' எனவெளிப்படுத்தலாம் :

4. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் அரசாங்க அதிபரே, இச் சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கத்திற்காக, அந்நிருவாக மாவட்டத்தின் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலராதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய அரசாங்க அதிபர் ஒவ்வொருவரும், தமது நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதான ஒவ்வொரு பெறுமதியுயர்ந்த இடப் பரப்புத் தொடர்பிலும் இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் ஒரு காணிப்

பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலருக்கு வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தலும் அக் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

6. ஐந்தாம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றில் காணப்படும் ஒவ்வொரு காணி தொடர்பிலும், பிரதம விலைமதிப் பீட்டாளரின் காணிப் பெறுமதி யுயர்வுக் கட்டண அலுவலர் பின்வருவனபற்றி மதிப்பீடொன்றினைத் தயாரித் தல் வேண்டும் :—

(அ) எவ்வபிவிருத்தித் திட்டம் தொடர்பில் பெறுமதியுயர்ந்த இடப் பரப்பு வெளிப்படுத்தப்படுகின்றதோ அவ்வபிவிருத்தித் திட்டம் அமைக்கப்படுவதற்கு அல்லது தாபிக்கப்படுவதற்கு அல்லது சீர்திருத்தப்படுவதற்கு உடனடியாக முன்னதாக அக்காணியின் சந்தைப் பெறுமதி; அத்துடன்

(ஆ) அங்ஙனம் அமைக்கப்பட்ட, தாபிக்கப்பட்ட அல்லது சீர்திருத்தப் பட்ட ஓராண்டுக்குப் பின்னர் அக்காணியின் சந்தைப் பெறுமதி.

7. காணிப்பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர், ஐந்தாம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றில் குறிக்கப்பட்ட ஒவ்வொரு காணி தொடர்பிலும் 6 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு அத்தகைய காணியின் சந்தைப்பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஐம்பது சதவீதத்தின்படி கணிக்கப்பட்ட காணிப்பெறுமதியுயர்வுக் கட்டணமொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

8. (1) காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர், 5 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றின் பிரதிகளைப் பெறுமதியுயர்ந்த இடப்பரப்பிற்குட் பட்ட உள்ளூரதிகாரசபை அலுவலகத்திலும் அஞ்சல் அலுவலகத்திலும் பெரும் பாக அரசிறை அலுவலர் அலுவலகத்திலும், அவரது அபிப்பிராயத்தில் அவ் விடப்பரப்பிலுள்ள பொதுமக்கள் நாடிச் செல்கின்ற பெறுமதியுயர்ந்த இடப் பரப்பினுள் உள்ள அத்தகைய பிற இடங்களிலும் வெளிக்காட்டி வைப்பித்தல் வேண்டும்.

9. (1) எட்டாம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் அறிவித்தலின் பிரகாரம் செய்யப்பட்டுள்ள ஒவ்வோர் ஆட்சேபனையும் எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய அறிவித்தலில் குறிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதிவஞ்சல் மூலமாக காணிப்பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலருக்கு அனுப்பப்படலும் வேண்டும். அத்தகைய ஆட்சேபனைகளைச் செய்யும் ஆள் இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் ''ஆட்சேபனையாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட எந்த ஆட்சேபனையையும் பெற்றுக்கொண்டதன்பேரில், காணிப்பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர் அத்தகைய ஆட்சேபனைகளைப் பற்றிய விசாரணை நடாத்தப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்ட தேதியையும் நேரத்தையும் இடத்தையும் பற்றி ஆட்சேபனை யாளருக்கு அறிவித்தல் வேண்டும் :

ஆயின், மேலும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட ஆட்சேபனை எதுவும் 5 ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றில் குறிக்கப்பட்ட ஏதேனும்

காணியின் சொத்தாண்மை பற்றிய அல்லது அத்தகைய காணியிலுள்ள பயன்தரும் அக்கறைபற்றிய ஏதேனும் பிணக்குத் தொடர்பிலானதாயிருக்குமிடத்து, காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர், அத்தகைய காணியின் பெறுமதி ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சுகிறதா அல்லவா என்பதற்கிணங்க, அத்தகைய காணி அமைந்துள்ள இடத்தின்மீது நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது நீதிவான் நீதிமன்றத்திற்கு அத்தகைய பிணக்கினை ஆற்றுப்படுத்தல் வேண்டும் என்பதுடன், காணி கொள்ளுதற் சட்டத்தின் 11ஆம் பிரிவின், 12ஆம் பிரிவின், 13ஆம் பிரிவின், அத்துடன் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஆற்றுப்படுத்துகை ஒவ்வொன்றுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

10. (1) ஒன்பதாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலரினால் எடுக்கப்பட்ட முடிவினால் இன்னலுறும் எந்த ஆளும், அத்தகைய முடிவு அவருக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கெதிராக எழுத்திலான மேன்முறையீடொன்றினை அமைச்சருக்குச் செய்யலாம். அதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள காலத்திற்குள் காணிப்பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலரின் முடிவுக்கெதிராக மேன்முறையீடெதுவும் செய்யப்படாதிருக்குமிடத்து, அத்தகைய முடிவு முற்றானதும் இறுதியானது மாகுமென்பதுடன், அது எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(2) இப்பிரிவின்கீழ் அமைச்சருக்குச் செய்யப்பட்டுள்ள எந்த மேன்முறையீட்டினது முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அம்முடிவை அவர் உறுதிப்படுத்தலாம் அல்லது வேறுபடுத்தலாம், அத்துடன் அத்தகைய மேன்முறையூட்டின் மீது அமைச்சரினால் எடுக்கப்படும் முடிவு முற்றானதும் இறுதியானதுமாகுமென்பதுடன், அது எந்தச் சட்ட நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

12. (1) ஐந்தாம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட கூற்றில் குறிக்கப்பட்ட ஏதேனும் காணியின், அத்தகைய கூற்று முதன்முதலில் எவ்வாண்டில் தயாரிக்கப்பட்டதோ அவ்வாண்டில், சொந்தக்காரராக, அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளராக அல்லது பயன்தரும் அக்கறையொன்று உடையவராக எவ்வாளின் பெயர் தோன்றுகின்றதோ அவ்வாள், அத்தகைய காணி தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட காணிப்பெறுமதியுயர்வுக் கட்டணத்தை, அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் அல்லது 10 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய கட்டணத்தொகை வேறுபடுத்தப்பட்டிருக்கின்றவிடத்து அல்லது திரிபுபடுத்தப்பட்டிருக்கின்றவிடத்து, அங்ஙனம் வேறுபடுத்தப்பட்ட அல்லது திரிபுபடுத்தப்பட்ட தொகையை, செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) எக்காணி தொடர்பிலும் நிர்ணயிக்கப்பட்ட காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணமானது, காணி பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர் தமது தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கக்கூடியவாறாக, இருபது தவணைகட்கு மேற்படாத அத்தனை ஆண்டுத் தவணைகளில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

15. பெறுமதியுயர்வுக்கட்டணமொன்று செலுத்தப்பட வேண்டியுள்ள ஏதேனும் காணி தொடர்பில் சொத்தாண்மை மாற்றமொன்று ஏற்படுமிடத்து, அத்தகைய காணியின் சொத்தாண்மையைக் கையுதிர்க்கும் ஆளினால் அத்தகைய

காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணம்மாகச் செலுத்தப்பட்ட தொகைகள் 1963ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினல் செலுத்தப்பட வேண்டிய மூலதன இலாபவரியைக் கணிக்கும் நோக்கங்களுக்காக, அத்தகைய சொத்தாண்மை மாற்றம் ஏற்பட்ட நேரத்தில் அத்தகைய காணியின் பெறுமதியாக மதிப்பிடப்பட்ட தொகை யிலிருந்து கழிக்கப்படற்குரியதாதல் வேண்டும்.

### பாகம் II—பயன்பெற்ற இடப்பரப்புகள்

**16.** ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் அரசாங்க அதிபர் இச் சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக அந்த நிருவாக மாவட்டத்தின் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய அரசாங்க அதிபர் ஒவ்வொருவரும் அவரது நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட ஒவ்வொரு பயன்பெற்ற இடப்பரப்புத் தொடர் பிலும் இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலரொருவருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர்மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலும் அக்கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

**17.** *(1)* நிருவாக மாவட்டமொன்றுக்குட்பட்ட எந்த இடப்பரப்பிலும் உள்ள கமத்தொழிற் காணிகளின் உற்பத்திவளம் அத்தகைய இடப்பரப்பில் அபிவிருத்தித் திட்டமொன்று அமைக்கப்பட்ட தன் விளைவாக (அத்தகைய அமைப்பு நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்தியதாயினும் சரி அல்லது பிந்திய தாயினும் சரி) முன்னேற்றமடைந்திருக்குமிடத்தும், அல்லது முன்னேற்ற மடையக்கூடியதாகவிருக்குமிடத்தும், அத்தகைய அமைப்பிற்கு உறப்பட்ட செலவு, முழுதாக அல்லது பகுதியளவில் அரசினல் அல்லது அரச கூட்டுத் தாபனமொன்றினல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமிடத்தும், அந்த நிருவாக மாவட்டத்திற்கான காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர், கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலமாக அத்தகைய இடப்பரப்பை ஒரு ''பயன் பெற்ற இடப்பரப்பு'' என வெளிப்படுத்தலாம்.

(2) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும், அக்கட்டளையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பயன்பெற்ற இடப்பரப்பின் எல்லைகளையும் அத்தகைய பயன்பெற்ற இடப்பரப்பு எவ்வபிவிருத்தித் திட்டம் தொடர்பில் வெளிப் படுத்தப்பட்டுள்ளதோ அவ்வபிவிருத்தித் திட்டத்தின் பெயரையும் குறித்தல் வேண்டும்.

**18.** *(1)* பதினேழாம் பிரிவின்கீழ் கட்டளையொன்று வெளியிடப்பட்ட பின்னர் கூடியவிரைவில், காணிப்பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர், அத் தகைய கட்டளையில் குறிக்கப்பட்ட பயன்பெற்ற இடப்பரப்பில் அமைந்துள்ள எல்லாக் கமத்தொழிற் காணிகளும் பற்றிய இடாப்பொன்றினைத் தயாரித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்படும் இடாப்பு ஒவ்வொன்றும் பயன்பெற்ற இடப்பரப்பிலுள்ள எல்லாக் கமத்தொழிற் காணிகளின் பெயர் களையும் அவற்றின் பரப்பளவுகளையும், அத்தகைய எந்தக் காணியும் அதன் சொந்தக்காரரினல் பயிரிடப்படுமிடத்து, அத்தகைய சொந்தக்காரரின் பெய ரையும், காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அனு

மதிப்பத்திரமொன்றின் மூலம் அத்தகைய எக்காணியும் பாரதீனப்படுத்தப் பட்டிருக்குமிடத்து, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் பெயரையும், அத்தகைய எக்காணியும் வாரக்காரரொருவரினுல் பயிரிடப்படுமிடத்து, அத்தகைய வாரக்காரரின் பெயரையும் விதிக்கப்படக்கூடிய பிற விவரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பின்வரும் கருமங்களைக் கருத்திற்கொண்டு அத்தகைய இடாப்பிலுள்ள காணிகளைக் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர் வகைப்படுத்தல் வேண்டும்:—

(அ) பயன்பெற்ற இடப்பரப்பில் அமைந்துள்ள அபிவிருத்தித் திட்டத்தில் உறப்பட்ட மூலதனச் செலவும் அதன் தேய்மான வீதமும்;

(ஆ) அத்தகைய அபிவிருத்தித் திட்டத்தின் மீதான செயற்பாட்டுச் செலவும் பழுதுபார்த்தற்செலவும் பேணற்செலவும்;

(இ) வகைப்படுத்தலின் விடயமாகவுள்ள காணிக்கு ஒரு தனிப் பயிர்ச் செய்கைக்காக அல்லது இரு பயிர்ச் செய்கைகளுக்காக அல்லது செறிவான பயிர்ச்செய்கைகளுக்காகச் சராசரியாகக் கிடைக்கக் கூடியதாகவுள்ள நீரும்;

(ஈ) அத்தகைய காணிக்கு நீர்ப்பாசனவசதி கிடைக்கும் உறுதியும் கிரமமும்;

(உ) அத்தகைய காணி பயன்பெற்றுள்ள அளவும்;

(ஊ) அத்தகைய அபிவிருத்தித் திட்டத்தின் விளைவாக அத்தகைய காணியின் கமத்தொழில் உற்பத்தியில் ஏற்படக் கூடிய அதிகரிப்பும்; அத்துடன்

(எ) விதிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு கருமங்களும்.

19. (1) ஏதேனும் பெறுமதியுயர்ந்த இடப்பரப்பிலுள்ள கமத்தொழிற் காணிகள் தொடர்பில் காணிப்பெறுமதியுயர்வுக் கட்டணங்கள், அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறுன அத்தகைய ஓர் அடிப்படையில் அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படைகளில் அறவிடப்படுதல் வேண்டும்:-

(அ) ஒவ்வோர் ஏக்கர் காணிக்கும் ஒவ்வோர் ஆண்டுக்கும் குறித்தவொரு தொகையின் அடிப்படையின்மீது;

(ஆ) அத்தகைய எக்காணிக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் குறித்தவோர் அளவினதான நீருக்கான ஆகக் குறைந்த கட்டணத்தின் அடிப்படையின் மீதும், அத்தகைய குறித்த அளவுக்கு மேலாக வழங்கப்பட்ட நீருக்கான மேலதிகக் கட்டணத்தின் அடிப்படையின் மீதும்;

(இ) அத்தகைய எக்காணிக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் நீரின் மொத்த அளவின் அடிப்படையின்மீதும்.

23. பாதகமான வானிலை இயல்புகள் அல்லது பூச்சிப்பீடை நோய்கள் அல்லது இவை போன்ற ஏதுக்களினுல் பயன்பெற்ற இடப்பரப்பொன்றில்

கமத்தொழிற் பயிர்கள் பயன்தரத் தவறியிருக்குமிடத்து, கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலமாக அமைச்சர் அத்தகைய பயன்பெற்ற இடப்பரப்பிற்குட்பட்ட எக்காணி தொடர்பிலும் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணமொன்றினைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகும் ஆள் ஒவ்வொருவரையும் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் அத்தகைய காணி தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியுயர்வுக் கட்டணத்தை அந்த ஆண்டிற்குச் செலுத்துவதினின்றும் விலக்களிக்கலாம்.

24 (1) பயன்பெற்ற இடப்பரப்பொன்றிற்குட்பட்ட எக்காணியிலுமுள்ள கமத்தொழிற் பயிர்கள், எந்த ஆண்டிலும் அத்தகைய காணிக்கு நீர் வழங்கும் நீர்ப்பாசன வேலைகளிலுள்ள அல்லது விநியோக முறைமையிலுள்ள எவையேனும் குறைபாடுகள் காரணமாகப் பாதகமாகப் பாதிக்கப்பட்டிருக்குமிடத்து அந்த ஆண்டிற்காக அத்தகைய காணி தொடர்பில் காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணமொன்றைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகும் ஆள் அத்தகைய காணிப் பெறுமதியுயர்வுக் கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து தமக்கு விலக்களிக்குமாறு காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலருக்கு மேன்முறையீட்டினைச் செய்யலாம்.

(2) அத்தகைய எந்த மேன்முறையீட்டின்மீதும் காணிப்பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலரின் முற்றானதும் இறுதியானதுமாதல் வேண்டும்.

### பாகம் III—பொது

29. (1) இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றி அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காக அமைச்சர் காலத்துக்குக்காலம் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றினதும் அல்லது எதனதும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:—

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அது அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ் ஒழுங்குவிதியில் குறிக்கப்படக்கூடிய அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்

(4) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அது கசற்றில் வெளியிடப்பட்டபின் வசதியாகக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்காகத் தேசிய அரசுப் பேரவைமுன்னர் கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வண்ணம் அங்கீகரிக்கப்படாத எந்த ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்பு செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

30. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைபடுத்தினாலன்றி—

"கமத்தொழிற்காணி" என்பது, ஏதேனும் கமத்தொழில் அல்லது தோட்டத்தொழில் விளைபொருளின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் காணி எனப்பொருள்படும்;

''காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர்'' என்பது, எக்காணி தொடர்பிலும் அத்தகைய காணி அமைந்துள்ள பெறுமதியுயர்ந்த இடப்பரப்பு அல்லது பயன் பெற்ற இடப்பரப்புத் தொடர்பில் நியமிக்கப்பட்ட அல்லது விடயத்துக்கேற்ப, பதவிப் பெயர் குறிக்கப் பட்ட, காணிப் பெறுமதியுயர்வுக் கட்டண அலுவலர் எனப் பொருள் படும்;

''பிரதம விலைமதிப்பீட்டாளர்'' என்பது, அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் எவரேனும் சிரேட்ட உதவி விலை மதிப்பீட்டாளர் அல்லது உதவி விலைமதிப்பீட்டாளர் எனப்பொருள்படும்;

''அபிவிருத்தித் திட்டம்'' என்பது—

(அ) இச்சட்டத்தின் I ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், தொடர்பில், ஒரு கைத்தொழில் திட்டத்தையும், வீதியமைப்புத் திட்டத்தையும், உப்புநீர் விலக்குதல் திட்டத்தையும், நீர் வழங்கல் திட்டத்தையும், மின்சாரம் தோற்றுவித்தல், செலுத்துதல் என்பன பற்றிய திட்டத் தையும் உள்ளடக்கும்; அத்துடன்

